விலை சதம் 50 ★ பக்கங்கள்—8

மில்க்வைற் மேலுறைகள்

மில்க்வைற் மேலுறைகள் நம்பிக்கையின் சின்னம் அன்றி காசுத்தாள்கள் போல மதிப்புள்ளவை. எனவே எங்கள் மேலுறைகளைக் கவனித்து எங்கள் தயாரிப்புக்களை வாங்குங்கள்

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

SRI LANKA - JAFFNA ... RECEIVED 1978 -2- -7 PERIODICALS DIVISION ... LIBRARY

ஈழநாடு
வார மலர்
THE EELANAADU VAARAMALAR

## சரண்சிங் ஜனாதிபதியை சந்தித்தார்

(கொழும்பு)

இந்திய பிரதம மந்திரி திரு மொரார்ஜி தேசாயின் விசேஷ தூதுவராக வந்து ஜனாதிபதி பதவி ஏற்பு வைபவத்தில்

[8ம் பக்கம் பார்க்க]

மலர் 19 தை 23 ஸபர் 26 ஞாயிற்றுக்கிழமை [5—2—78] இதழ் 357

**ஜே. ஆர். பதவி ஏற்பதைப் பார்க்க**

# கொழும்பு நகரில் மக்கள் சமுத்திரம் திரண்டது

## முப்படை அணிவகுப்பு கண்கொள்ளாக்காட்சி

### விண்ணில் விமானச் சாகஸம்

(கொழும்பு)

**மக்களால், மக்களுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட, மக்களின் ஜனாதிபதியாக மாண்புமிகு திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று பதவியேற்று, பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.**

**இந்நிகழ்ச்சியைக் கண்டுகளிப்பதற்காக நாட்டின் பல பாகங்களிலுமிருந்து முன்னெப்போதையும் விட பெருந்திரளான மக்கள் நேற்று கொழும்பு மாநகரில் கூடியிருந்தார்கள்.**

பதவி ஏற்பு வைபவம் மிகப் பெருமைக்குரியதாகவும் அதேசமயம் ஆடம்பரமற்றதாகவும் இருந்தது,

முன்னாள் ஜனாதிபதி திரு. வில்லியம் கோபல்லவ முதலில் விடைபெற்றுக்கெண்டதை அடுத்து திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன விசேஷமாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் பிரதம நீதியரசர் திரு' நெவில் சமரக்கோன் முன்னிலையில் சரியாக காலை 8-50 மணிக்கு பதவிப் பிரமாணம் செய்து ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுக்கொண்டார்.

பதவி ஏற்பு வைபவங்களைக் கண்டுகளிக்கவும் ஆசிவழங்கவும். பௌத்த குருமார்கள், இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதப் பெரியோர்கள் ஆகியோரும் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் ராஜதந்திரிகள் ஆகியோர் பிரசன்னமாய் இருந்தனர்.

இந்தியாவிலிருந்து உள்நாட்டு அமைச்சர் திரு. சரன் சிங் தலைமையில் விசேஷ தூதுக்குழு வொன்று வந்திருந்தனர். அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மிகாட்டரும் விசேஷகுழுவொன்றை அனுப்பியிருந்தார்.

லட்சக்கணக்கான மக்கள் காலிமுகத்திடலிலும் தேசிய அரசுப்பேரவை வளவிலும், ஏனைய வீதிகளிலும் திரண்டிருந்தனர். வரலாற்றில் முன்னெப்போதும் இவ்வாறு மக்கள் கொழும்பில் திரண்டிருக்கவில்லை யென்று நம்பப்படுகிறது.

காலிமுகத்திடலில் விசேஷமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேடையில் பதவியேற்பு நிகழ்ச்சி இடம்பெற்றது .

### பழைய ஜனாதிபதி

இதற்கு முன்பதாக பழைய ஜனாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையைப் பெற்றுக்கொண்டதுடன் பிரதம மந்திரியிடமும் முப்படைத் தலைவர்களிடமும் விடைபெற்றுக்கொண்டு, மக்களுக்கு வணக்கம் தெரிவித்து விடைபெற்றுக்கொண்டார்

அவருக்கு மரியாதை செலுத்துமுகமாக 21 பீரங்கிக் குண்டுகளை ராணுவத்தினர் தீர்த்தனர்

### ஜனாதிபதியின் கொடி

சங்கொலிக்கப்பட்டு பேரிகை முழங்கியது. ஜனாதிபதியின் கொடி ஏற்றிவைக்கப்பட்டது.

இதனை அடுத்து விசேஷமாக அமைக்கப் பட்ட மேடைக்கு பிரதம நீதியரசர் திரு. நெவில் சமரக்கோன்

(8-ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் தொகுதிக்கு முதலில் விஜயம்

ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுக் கொண்டதின் பின்னர் முதல் நடவடிக்கையாக தம்மைத் தேசிய அரசுப் பேரவைக்கு தெரிவுசெய்து அனுப்பிய கொழும்பு மேற்குத் தொகுதிக்கு விஜயம்செய்து வாக்காளர்களுக்கு நன்றிதெரிவித்தார்.

### ஜனாதிபதி கல்லூரி

அதன்பின் டொரிங்டன் அவெனியுவில் உள்ள ஜனாதிபதி கல்லூரியைத் திறந்துவைத்தார். இரண்டு மாணவர்களையும் பள்ளியில் சேர்த்தார்.

நேற்றுக்காலையில் கொட்டஹேனை பொல்வத்தையிலுள்ள தர்மகீர்த்தி பௌத்த ஆலயத்துக்குச்சென்று வழிபட்டார். அங்கு சுதந்திர தினத்தைக்குறிக்கும்வகையில் 30 புறுக்களை அவர் கூண்டிலிருந்து பறக்கவிட்டார்.

## நாணயமும் முத்திரையும்

ஜனாதிபதியாக திரு.ஜே.ஆர் ஜயவர்த்தன பதவியேற்றதை யொட்டி புதிய ஒரு ரூபாய் நாணயமும், 15சதமுத்திரையும் நேற்று வெளியிடப்பட்டது.

நேற்று இவ் வைபவத்தையொட்டி கொழும்பில் சகல மதத்தினரும் பிரார்த்தனைகளையும், வழிபாடுகளையும் நடத்தினார்கள்.

### ஜனாதிபதி மாளிகை

திரு. ஜே . ஆர் ஜயவர்த்தன ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதின் பின் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்ற போது அங்கும் முப்படை வீரர்களும் அணிவகுத்து மரியாதை செலுத்தினர். 25முறை பீரங்கிக் குண்டுகள் தீர்க்கப்பட்டன. அணிவகுப்புமரியாதையைஏற்றதின் பின்னர், தமது துணைவியார் சகிதம் ஜனாதிபதி மாளிகைக்குள் சென்றார். அங்கு முன்னாள் ஜனாதிபதி, அமைச்சர்கள் பிரமுகர்கள் ஆகியோருக்கு அவர் பகல் விருந்தளித்தார்.

## சென்னையில் நடந்த பாராட்டு வைபவம்

திரு.ஜே.ஆர்ஜெயவர்த்தன பதவியேற்றதைப் பாராட்டும் வைபவமொன்று நேற்று சென்னையில் நடைபெற்றது.

இதற்கு சென்னையிலுள்ள துணைக்கமிஷனர் திரு. கௌத்தமதாஸ தலைமை வகித்தார். அவர்பேசும்போது. வெளிநாட்டிலுள்ள இலங்கை மக்கள் நாட்டின் பொருளாதாரவளர்ச்சிக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்

மகாபோதி சங்கத்தைச் சேர்ந்த நந்தீஸ்வரதேரோவும் பேசினார் இலங்கை இந்திய நட்புறவுச்சங்கத்தின் தலைவர் திருமதி தர்மன் பேசும்போது இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையில் புதிய ஜனாதிபதி பதவி ஏற்றிருப்பதையடுத்து மேலும் அபிவிருத்தியடைந்து வளரும் என்று நம்பிக்கை தெரிவித்தார்

இந்த நிகழ்ச்சியில் தமிழ் நாடு அரசின் பொதுப்பணித்துறை அமைச்சர் செல்வி பி ரி சரஸ்வதி கலந்து கொள்வதாய் இருந்தது ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தினால் அவர்வர முடியவில்லை

CIC சி.ஐ.சி.

ஸ்தாபனத்தாரின் தரமான விவசாய கிருமிநாசினிகளை
கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக்கொள்ள
ஸ்தாபனத்தாரின் யாழ்ப்பாண மாவட்ட ஏக விநியோகஸ்தர்களான
எம்மை நாடுங்கள்

த ரோரு லிமிட்டெட்

32, கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: 7651

# பிறந்தநாள் கொண்டாடும் இளைஞர் தலைவர் 'யோகேஸ்'

யாழ்ப்பாணத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும் பெரும்பாலான தமிழ் இளைஞர்களின் அன்புக்குப் பாத்திரமானவருமான திரு. வெற்றிவேலு யோகேஸ்வரன் இன்று தனது 45-வது பிறந்தநாளை கொண்டாடுகின்றார்.

கடந்த இனக்கலவரவேளையில் பறக்கும் துப்பாக்கி குண்டுகள் நடுவிலும் எரியும் தீச்சுடர்கள் மத்தியிலும் மக்களைக் காப்பாற்ற அவர் முனைந்து நின்ற காட்சியைக் யாழ். மக்கள் மறந்துவிட மாட்டார்கள்.

கண்ணனுக்கு பாரதி கூறியது போல் யோகேஸை என்றும் பாசமுள்ள அண்ணனாக 'இளைய சமுதாயம் வரிந்து கொண்டதோ அன்று முதற்கொண்டு நாளாக நாளாக இளைய சமுதாயத்திற்கும் அவருக்குமிடை பற்றுமிகுந்துவரப்பார்க்கின்றோம். யோகேஷால் இளைய சமுதாயம் பெற்று வரும் அன்புதவிகளை எல்லாம் இங்கு எழுத முடியாது.

மேலும் அவரின் மக்கள் சேவைக்கு நடைமுறைக் காட்டியாக அவர்மேசையைச் சுற்றிக்குவிந்து நிற்கும் மக்கள் வெள்ளத்தை சுட்டிக் காட்டலாம். ஆனல் சுவர் இருந்தால் தான் சித்திரம் எழுதலாம் என்பதை யாழ். மக்கள் மறந்து விட்டார்கள். தங்கள் பிரதிநிதியை சுற்றி அவர் மூச்சுவிடக்கூடமுடியாது குவிந்து நிற்பதை நான் கண்டுள்ளேன். ஒவ்வொருவராக அவரைச்சந்தித்தால் அவருக்கும் சௌகரியமாக இருக்கும். மக்களுக்கும் தங்கள் தேவைகளை அந்தரங்கமாக எடுத்துகூற வாய்ப்பாக இருக்கும். எனவே இன்று அவருக்கு யாழ் மக்கள் அளிக்கும் பிறந்தநாள் பரிசாக இம்முடிவை எடுக்கட்டும். தங்கள் எம். பி யை கண்ட கண்ட நேரங்களில் எல்லாம் சந்தித்து அவரது தேகசுகத்தைக் கெடுக்காது காலையிலும் மாலையிலும் ஒரு ஒழுங்கு முறைப்படி யாழ். மக்கள் அவரை சந்திக்க முன்வருவர்களாயின் எவ்வளவு நன்ருய் இருக்கும்.

தமிழ் மக்களும் பிரதேசமும் என்றும் அவரை நினைவில் வைத்திருக்கும் விதத்தில் சரித்திர சாதனைகளை அவர் நிகழ்த்தவேண்டும் அதற்கான வலுவும் உறுதியும் இறைவன் அருளட்டும்.

—பத்மாகரன்

# டெஸ்ட் தொடரில் இந்தியா தோல்வி

அடிலெய்ட், பெப். 3

இந்திய-ஆஸ்திரேலிய இறுதி டெஸ்டில் 47 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றதனல் இந்த 5 டெஸ்ட் தொடரிலும் வெற்றிபெற்றது. ஆஸ்திரேலியா 3 டெஸ்ட்களிலும் இந்தியா 2 டெஸ்ட்களிலும் வெற்றிபெற்றது.

கடும் போட்டிக்கு மத்தியில் இந்தியக் கோஷ்டி அபாரமாக விளையாடியும் தோல்வியை ஏற்பட்டது

4வது இன்னிங்ஸில் 400 ஓட்டங்களுக்கு மேல் இரண்டாவது தடவையும் வெற்றிபெற்று ஒரு சாதனையையும் இந்தியா ஏற்படுத்தியுள்ளது. வெற்றி பெறுவதற்கு 493ஓட்டங்களைப் பெறவேண்டியநிலையில் 5வது நாளான நேற்றும் 6வது நாளான இன்றும் ஆடி இன்று பகற்போசன இடைவேளைக்குப் பின் 445 ஓட்டங்களுக்குச் சகல விக்கட்டுகளையும் இழந்தது.

இந்தியா தரப்பில் 2வது இன்னிங்ஸில் விஸ்வநாத்(73), அமர்நாத் (86), வெங்சகார் (78) கிருமானி ஆகியோர் சிறப்பாக ஆடினர்கள். விஸ்வநாத் முதல் இன்னிங்ஸிலும் 89 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

ஆஸ்திரேலியா தரப்பில் முதல் இன்னிங்ஸில் உதவிகாப்டன் யாலோப் 121 ஓட்டங்களையும் 5 காப்டன் சிம்சன் 100 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர் சிம்சன் 2ம் இன்னிங்ஸில் 51 ஓட்டங்களையும் பெற்ருர்.

ஸ்கோர் விபரம்: ஆஸி—505 256, இந்தியா—269, 445.

[இ]

# சோவியத்யூனியனில் இலங்கை சுதந்திரதினம்

மாஸ்கோ, பெப். 3

இலங்கையின் சுதந்திர தினத்தை பாரிய அளவில் கொண்டாடுவதற்கு சோவியத் மக்கள் தயாராகிவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

''இவ்வாண்டின் சுதந்திர தின வைபவங்கள் முற்போக்குச் சமூக மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான இலங்கை மக்களின் போராட்ட வரலாறில் ஒரு புதிய கட்டத்தினது ஆரம்பத்தினைக் குறிக்கின்றது. ஒரு வளரும் நாடென்றவகையில், இலங்கை முகம் கொடுக்கும் பிரச்னைகளை சோவியத் மக்கள் நன்கு புரிந்துகொண்டுள்ளதுமட்டுமன்றி, இப்பிரச்னைகளுக்குத் தீர்வு காணுவதற்கு இலங்கை மக்களுக்கு உதவவும் தயாராயுள்ளார்கள்'' என சுதந்திரதின விழா ஏற்பாடுகள்பற்றிக் கூறுகையில் நொவஸ்தி நிருபர் வை. திரித்திரியேவ் குறிப்பிட்டார்.

அண்மையில் இலங்கைப் பிரதமரின் விசேட தூதுவராக பொதுநிர்வாகத்துறை அமைச்சர் திரு. மொண்டேகு ஜயவிக்ரம சோவியத் யூனியனுக்கு மேற்கொண்ட விஜயமும், அவர் சோவியத் தலைவர்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளும் சோவியத்-இலங்கை நட்புறவு தொடர்ந்தும் வளர்ந்து வலுப்படும் என்ற நம்பிக்கையை ஊட்டுவதாக உள்ளது எனவும் அவர் மேலும் கூறினர்.

(இ)


## அவசியம் தேவை

வடமாகாணத்தில் யந்திரத்தில் (Power looms) இயங்கும் நெசவு ஆலை (Textile Mill) தேவை. விற்பதற்கு இருந்தால் உடனடியாக எல்லா விபரங்களுடனும் கீழ் உள்ள விலாசத்திற்குத் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ தொடர்புகொள்ளவும்.

S. Ramachandran, 60, Oaklands Road, Hanwell, London, w7. U.K. 8409


# ஜே. ஆருக்கு வெள்ளித்தட்டு

(கொழும்பு)

ஜனதிபதியாகப்பதவியேற்ற திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு தேசிய அரசுப் பேரவையில் நேற்று முன்தினம் அங்கத்தவர்கள் பலரும் புகழ் மாலை சூட்டினர், பேரவை அங்கத்தவர்கள் சார்பாக பெரிய அளவிலான வெள்ளித் தாம்பாளமொன்று சபாநாயகரிடமிருந்து திரு. ஜே. ஆர். பெற்றுக்கொண்டபோது, அங்கத்தவர்கள் அனைவரும் எழுந்து நின்று கரகோஷம்செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர்.

வெள்ளித் தாம்பாளத்தைப் பெற்றுக்கொண்டு திரு. ஜே. ஆர். பேரவைக்கு வெளியே வந்தபோது நேரம் காலை 11-38. பேரவைக்கு வெளியே நின்று பேரவை அங்கத்தவர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார். இக்காட்சிகளை அரசதிரைப்படக் கூட்டுத்தாபனமும். வெளிநாட்டு தொலைக்காட்சி நிறுவனங்களும் படமெடுத்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த பேரவை உறுப்பினர் எவரும் நேற்றுமுன்தினம் சமூகமளிக்கவில்லை.

(ம)

......

## வித்தியாலய கட்டிடத் திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலத்தின் புதிய கட்டிடத்தை கோப்பாய் எம். பீ திரு. சி. கதிரவேலுப்பிள்ளை இன்று திறந்துவைப்பார்.

வித்தியாலய அதிபர் திரு. வி. எஸ். சுந்தரசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவினை, வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார்.

வலி-கிழக்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் வித்தியாலயக் கொடியை ஏற்றிவைப்பார். உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஈ. க. ஈசுரபாதம், கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா, யாழ். மாவட்ட விவசாய வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். கணேசமூர்த்தி, இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் திரு. வ. கந்தப்பிள்ளை, இளைப்பாறிய அதிபர் திரு. க. இ. குமாரசாமி, ஆகியோரும் உரைநிகழ்த்துவர்.

(கூ)

......

## சதுர் இலக்ஷ நாமார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் நாளை மாலை 6 மணிக்கு யந்திர பூசையும் சதுர் இலக்ஷ நாமார்ச்சனையும் ஆரம்பமாகி 21 தினங்கள்வரை நடைபெறும்.


## விற்பனைக்கு

B M C 24 Sri, முந்திய, பிந்திய மொடல் என்ஜின்களுக்குரிய சகல உதிரிப்பாகங்களும் ஒருகியர் பொக்சும் 3ம் வீலைவிட ஏனைய வீல்களும் விற்பனைக்குண்டு. மேல் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. பார்வையிட்டு விலைகள் கோரப்படுகின்றன. சபா சின்னத்தம்பி, மருதனுமடம், சுன்னுகம். 8310



# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இந்துக் கல்லூரிக்கும், மகளிர் கல்லூரிக்குமிடையில் 2 பரப்புக் காணியும், G. E. C., றேடியோவும் (மெயின் செற்) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 78, அரசடி ரோட், யாழ்ப்பாணம். 8406

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் சுட்டிபுரம் அம்மன் கோவிலுக்கு வடக்குப்புறமாக உள்ள 30 பரப்புப் பனங்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- இ. கனகரத்தினம், தென்மராட்சி ப. நோ. கூ. ச. கொடிகாமம். 8386

முகமாலையில் 29 ஏக்கர் தென்னங்காணி 1000 காய்க்கும் தென்னைகள் உண்டு. யாழ்ப்பாணத்திலிருந்து 1மணித்தியால பிரயாணம். தொடர்பு கொள்ளவும். எஸ். பொன்னையா, கண்டாவளை வீதி, கண்டாவளை. 8413

எண்ணெய் முழுக்குக்குச் சிறந்த ஒலிவ் ஸ்ஞானப்பவுடர் தலையில் உள்ள அழுக்கு பேன், பிசான், சொடுகு ஆகியவற்றை நீக்குகின்றது. வாங்கி உபயோகியுங்கள்' ஓர் மில்க்வைற் தயாரிப்பு. 8361

முல்லைத்தீவு அளம்பில் ரோட் 6-ம் கட்டையடியில் உள்ள 15 ஏக்கர் தென்னங்காணியும், 5 ஏக்கர் மரமுந்திரிகை கொண்ட காணியும் உடனடியாக விற்பனைக்குண்டு. க. இளையதம்பி, சைவப்பாடசாலை வீதி, முல்லைத்தீவு 8420

**FOR SALE**

2 H. P. Single Phase Motor 24 V Dynamo. Battery chagers compressors. 113, Vembadi Road, Jaffna. 8422

## தேவை

பத்து வருடங்களுக்கு மேலான அனுபவமும் நற்பழக்கமும் நம்பிக்கையும் வாய்ந்த லொறி லைசென்ஸ் உள்ள வான் டிறைவர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8411, C/o ஈழநாடு, லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8411

தபால் கந்தோர், பாவிப்பிற்கு கீழ்க்காணும் எல்லைகளுக்குள் அமைய வீடு ஒன்று விலைக்கு அல்லது வாடகைக்கு தேவை எல்லைகள் - ஐந்து சந்தியிலிருந்து நாவலர் ரோட், பிறவுண் ரோட் சந்திவரை, வின்சர் தியேட்டர் சந்தியிலிருந்து கஸ்தூரியார் ரோட் கல்லூரி வீதிவரை, ஓட்டுமட சந்தியிலிருந்து மானிப்பாய் ரோட், முட்டாசுக்கடை சந்திவரை, முட்டாசுக்கடை சந்தியிலிருந்து காங்கேசன்துறை வீதி தட்டாதெரு சந்திவரை, வண்ணை சிவன்கோவில் வடக்கு வீதி அல்லது மாவடி ரோட்டிலிருந்து காதி அபூபக்கர் ரோட் சந்திவரை. விபரங்களுக்கு: விளம்பர இல. 8390, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8396

## தேவை

யாழ்ப்பாணம் பஜாரில் பல சரக்கு வர்த்தக ஸ்தாபனத்துக்கு வியாபாரத்தில் நன்கு அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் மனுச்செய்யவும் விளம்பர இல: 8416, C/o ஈழநாடு லிமிட்டெட் யாழ்ப்பாணம். 8416

தேவன்ஸ் சீயாக்காய்பவுடர் மற்றும் தயாரிப்புக்கள் தயார் செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. தேவன்மில் 159, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி. யாழ்ப்பாணம். 8418

பால் விநியோகம் செய்வதற்கு ஆட்கள் தேவை. சொந்தச்சைக்கிள் வைத்திருப்பவர்கள் நேரில் வரவும். திருவாகி கோகுலம் பால்விநியோக நிலையம். 144, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 8399

பிரபல கற்பூரத் தொழிற்சாலைக்கு கற்பூரம் பைக்கற் செய்வதில் அனுபவம் வாயந்த பெண்பிள்ளைகள் தேவை. (மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது) கடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 8394, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8394

யாழ்ப்பாணப் பகுதியில் வீடு கட்டுவதற்கு காணி. அல்லது வீட்டுடன் காணி. விபரங்களுடன் தொடர்புகொள்ளவும். விக்னராஜா, 27, இராஜசிங்க வீதி, கொழும்பு-6. (தொலைபேசி 85456) 8379

யாழ்ப்பாண குடாநாட்டில் விவசாய அபிவிருத்திக்கு ஏற்ற 75-125 பரப்பு வரை காணி. விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விக்னராஜா, 27, இராஜசிங்க வீதி, கொழும்பு-6, (தொலைபேசி 85456) 8378


## 6-ந் திகதிக் குரிய வழக்குகள்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் 6-ம் திகதியை விடுமுறைநாளாக அறிவித்திருப்பதின் காரணமாக அன்றைய தினம் யாழ். நீதிமன்றத்தில் விசாரணைக்கு நியமிக்கப்பட்டுள்ள வழக்குகள்யாவும் 7ம் திகதியே எடுக்கப்படும் என்று யாழ். நீதிமன்ற நீதிபதி திரு கே. வி. நவரத்தினம் அறிவித்துள்ளார்.

[கூ)

• • •

## சரண்சிங் வந்தார்

(கொழும்பு)

ஜனதிபதி பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு இந்திய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் நேற்று முன்தினம் கொழும்பு வந்துசேர்ந்தார்.

[உ]


## மாபெரும் கூட்டம்

இடம்: நல்லூர் கல்யாண மண்டபம்

காலம்: இன்று 5-2-1978 ஞாயிறு மாலை 5மணி

தலைவர்: மு. சிவசிதம்பரம் பா உ.

பேச்சாளர்: அ அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவர்
க துரைரத்தினம் பா. உ.,
வ. ந. நவரத்தினம் பா உ
சி. கதிரவேற்பிள்ளை பா. உ.
மு. ஆலாலசுந்தரம் [சட்டத்தரணி]
த. இராசலிங்கம் பா. உ
வெ. யோகேஸ்வரன் பா. உ.
இன்னும் பலர்

8425



# அவர்களும் பணம் சேர்க்கிருர்கள் !

எங்களூர் தெருப்பையன்களுக்கு எப்பொழுதுபார்த்தாலும் விளையாட்டு. காட்டுக்கூச்சலும், அட்டகாசச் சிரிப்புமாக எங்கள் பொதுமைதானத்தையே கலக்கிவிடுவார்கள். மைதானத்திற்கு அருகாமையில் எங்கள் வீடு இருந்தமையால் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் நாங்கள்தான். கொழும்பில் வேலைபார்க்கும் நான் எப்போது விடுமுறைக்கு வீடு வந்தாலும், என் தாயாரின் முறைப்பாடுகளைக் கேட்பதே வழக்கமாகிவிட்டது.

தலைநகரில் இல்லாத அமைதியைத் தாய் வீட்டில் பெறலாம் என்று வீடு தேடிவரும் எனக்கு, அவர்களின் அமர்க்களம் சில வேளைகளில் ஆத்திரத்தையே கிளறிவிட்டுவிடும். நன்ருகக் காய்த்துவந்த நெல்லிமரத்தை 'பட்டுப்' போகப் பண்ணியதே இந்தவாண்டுகள் தான். மாம்பழமோ, மாதுளம்பழமோ இவர்கள் கண்ணில்பட்டுவிட்டால் அவ்வளவு தான். எங்கள் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, பழத்தைப் பிடுங்கிவிடுவார்கள். இவர்களுடைய அட்டகாசத்தைப் பொறுக்கமாட்டாமல் இவர்களை அடக்க எண்ணி என் அண்ணு சங்குவேலியிலுள்ள தன் மாமா வீட்டிலுள்ள அல்சேஷன் நாயைக் கொண்டுவந்து கட்டிவிட்டான். வீரத்துடன் வந்த அந்த நாயும் இவர்கள் கொடுத்த 'பிஸ்கற்' இனிப்புப் பண்டங்களில் மயங்கி நாளடைவில் இவர்களைக் கண்டதும் வாலை ஆட்டத் தொடங்கிவிட்டது.

இவர்களைப்பற்றியே எண்ணிக்கொண்டிருந்த நான் எனக்குமுன்னல் நின்றிருந்த நண்பனை அப்பொழுதுதான் பார்த்தேன். அவன் 'ஷேட்' முழுவதும் மண்ணுக இருந்தது.

''என்னடா இது'' என்றேன்.

''வேறே யாரடா இதைச் செய்வார்கள். தலையில் ஒன்றுமில்லாமல் விளையாடுதுகளே அதுகள்தான், அதுகளெங்கே உருப்படப்போகுதுகள். பெரிய கிடங்கைக் கிண்டி இலை குழையால் மூடிவைச்சிருக்குதுகள், நான்தெரியாமல்போய்விழுந்து விட்டேன். விழுந்ததைப் பார்த்ததும் 'கெக்கெக்கே' என்று சிரிக்குதுகள்.''-நண்பன் பொறுமையில்லாமல் கத்தினன். எனக்குத் தெரியும் ''ஏனடா இதைச் செய்தீர்கள்?'' என்று அவர்களிடம் போனல் எங்களுக்கு ஒன்றும் தெரியாது என்றுதான் கையை விரிப்பார்கள் என்று.

'இம்முறை கறுத்தக்கொழும்பான்' மாம்பழங்களில் பத்துப் பதினைந்து மறைந்துவிட்டன. நான் ஒன்றும் பேசாது அவர்கள் விளையாட்டை அவதானிப்பதற்குச் சென்றேன். அவர்களுடைய விளையாட்டு பார்ப்பதற்கு நல்ல ஒரு பொழுதுபோக்காக அமைந்தாலும், அவர்கள் அதைத் தொடர்ந்து செய்யும் குரங்குத்தனங்களால் நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தோம். அதனல் அவர்கள்மீது எங்களுக்குப் பரிவு என்பதே எழவில்லை.

நண்பனை உள்ளே அழைத்துச்சென்றேன்.

நண்பன் சென்றதும் நான் இந்தப் பையன்களைப்பற்றியே நினைத்தபடி இருந்தேன். ''இவர்கள் ஏன் இப்படியெல்லாம் நடக்கிருர்கள். நாட்டின் எதிர்காலமே இவர்கள் கையில் தான். ஆனல் இவர்கள் தமது அட்டகாசத்தினலேயே நாட்டையும், வீட்டையும் அடுக்க நினைக்கிருர்களே. லீவு முடிந்து கொழும்பு போகும் முன் அவர்களில் சிலரைச் சந்தித்து அறிவுரை வழங்கினேன்.

''தாங்யூ மாமா'' என்று கூறிவிட்டு தகர்ந்தார்கள். சிறிது தொலைவில் சென்றதும் பக்கத்து வீட்டு மாமரத்திற்கு அவர்கள் கல் எறிவதை காண முடிந்தது.

நாய் வாலை யாரால்நிமிர்த்த முடியும்? என்று மனதுக்குள் ஒரு கேள்வியை எழுப்பியவாறு சென்றேன்.

மூன்று மாதங்கள் ஓடின. திரும்பவும் வீடுவந்தபொழுது என் தாயார் அவர்களைப்பற்றிய குற்றச்சாட்டுப் பட்டியலைப் படிக்கலானர்.

நாட்டில் தோன்றிய அசம்பாவிதங்களினல் இரண்டு, மூன்று கிழமை மைதானமே அடங்கிப்போயிருந்தது. ''அப்பா இப்பொழுதுதான் நிம்மதியாகப் படுக்கவோ, எழும்பவோ முடிகின்றது'' என்று அம்மா சந்தோஷப் பட்டுக்கொண்டார். அவர்களின் காட்டுக்கூச்சல் இல்லாதது எனக்கு ஒருமாதிரியாக இருந்தாலும், அம்மா மகிழ்ச்சியாக இருப்பதனல் நானும் பேசாமலிருந்துவிட்டேன். என் தந்தையோ மாமரத்திற்குக் கீழேயே படுத்து உறங்கத் தொடங்கிவிட்டார். இத்தனை காலமும் வாண்டுகளின் கல்லெறிகளுக்குப் பயந்து அவர் மாமர நிழலையே நாடுவதில்லை.

நாட்டில் அமைதி தலைகாட்டத்தொடங்கியதும், மைதானம் ஆட்டம்காணத்தொடங்கியது. காட்டுக்கூச்சல் அமர்க்களம் இவற்றுடன் "ரின்"கள் குலுக்கும் சத்தமும் கேட்டது. இது ஏதோ புது விளையாட்டு, யாருடைய மண்டையோ உருளப்போகின்றதென்பதை என்னல் உணரக்கூடியதாக இருந்தது. ஆர்வத்தை அடக்கமுடியாமல் மெதுவாக மைதானத்தை நோக்கி நடந்தேன். நான் அவர்களுக்குள்ளே இருப்பதையும் காணுதவர்களாய் 'ரின்'களைக் குலுக்கியபடி மூன்று பையன்கள் ஒவ்வொரு பையனுக்கருகிலும் சென்ருன். அந்தப் பையனும் தன் காற்சட்டைப் பைக்குள் கையைவிட்டு சில்லறைக் காசுகளைப்போட்டான். இதை எல்லாப்பையன்களுமே செய்தார்கள். அப்பொழுதுதான் ஒரு வாண்டு என்னைக் கவனித்திருக்கவேண்டும்.

''அடே ராஜ் அங்கிள் இருக்கிருர். அவரிடமும் வாங்குவோம் வாடா'' என்றபடி பையன்கள் என்னை அணுகினர்கள்.

என்னடா ''எந்த கட்டை அடிக்க இந்தத்திட்டம்'' என்றேன்.

''நாட்டை அழிக்க அல்ல உருவாக்கவே இந்த நிதி'' என்ருர்கள்.

பொத்துக்கொண்டு வந்த சிரிப்பை அடக்கியபடி ''என்னடா யாருக்கடா வண்டில் விடுகிறியள்'' என்றேன். தங்கள் வார்த்தைக்கு இன்னமும் என்னிடமிருந்து ஒரு மதிப்பும் எழாமலிருந்ததை ஒருவன் அவதானித்துவிட்டான். அவன் அருகில் வந்து, ''மன்னியுங்கள் அங்கிள்: நாங்கள் நம்நாட்டு அகதிகளுக்காக ஒரு நிதி திரட்டுகின்ருேம். அதுதான் இந்த''ரின்''. எங்களுக்கு அம்மா, அப்பா நெல்லிக்காய்க்கெனத் தரும் பணத்தையெல்லாம், இப்பொழுது இதில் தான் போடுகின்ருேம்'' என்ருன்.

அவர்களைப் பற்றி நான் கொண்டிருந்த எண்ணத்தில் சிறிய அசைவு ஏற்படுவதை என்னல் உணரமுடிந்தது. ஒன்றுக்குமே லாயக்கில்லாதவர்கள் என்று நம்மூரிப் பெரியவர்களால் இகழப்படுகின்ற, இப்பையன்கள் செய்யும் காரியம் என்னைத் திக்குமுக்காடச்செய்தது. திகைப்பிலிருந்துமீளமுடியாமல் இருந்த என்னை, அவர்கள்கண்களை அகலவிரித்தபடி உற்றுநோக்கிக் கொண்டிருந்தார்கள். தங்கள் செய்கை எனக்குவியப்பையோ? அதிர்ச்சியையோ தருமென்று அவர்கள் நினைக்காததே எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எங்கள் மௌனத்தைக் கலைத்தது இன்னொரு கோஷ்டி.

இரண்டு மூன்று பையன்கள் நாலைந்து கூடைகள் நிறைய பழைய உடுப்புகளுடன் வந்தனர். அதில் உயரமானவன் மற்றவர்களைப் பார்த்து,''இதுக்கு மேலே எங்களாலே சேகரிக்க முடியாதடா?ஒவ்வொருவனும் இரண்டு பழைய உடுப்பு தந்துவிட்டான், இது போதாதா?'' என்ருன்.

ஓ உடுப்புகள் கூட சேகரிக்கின்ருர்களா?

அவர்களைப் பற்றி இதுவரை நான் எண்ணியிருந்தஎண்ணங்கள் தவிடுபொடியாகி. அவர்கள் யாவரும் ஓர் உயர்ந்தஸ்தானத்தில் நின்ருர்கள். அவர்களை அப்படியே அள்ளி அணைக்கவேண்டும்போல் இருந்தது. என் கண்களாலேயே அவர்களை அணைத்தபடி, ''இதென்னடா நீங்கள் எல்லாரும் பெரியவேலை செய்கின்றீர்களே, நான் இதுவரை உங்களைப் பற்றித் தப்பபிப்பிராயம் அல்லவா கொண்டிருந்தேன்'' என்று கூறினேன்.

''என் புகழுரைகளால் உணர்ச்சிவசப்பட்ட ஒருவன். ''அங்கிள், இது மட்டுமில்லே, எங்களுடைய பழைய விளையாட்டுச் சாமான்களையும், நாங்கள்கொண்டுபோய் அகதிகள்முகாமிலுள்ள சிறுவர்களுக்குக் கொடுத்து விட்டோம்'' என்ருன்.

''ரொம்ப நல்ல பையன்களாக இருக்கின்றீர்களே'' என்று அவர்களைத் தட்டிக் கொடுத்தேன்.

ஒன்றும் தெரியாதவர்கள், அரை லூஸ்கள் என்றெல்லாம் எங்களால் இகழப்பட்ட அந்தச் சிறுவர்களின் வெளித்தோற்றத்தை மட்டும் கணக்கில் கொண்டு எவ்வளவு தப்பான அபிப்பிராயத்துடன் வாழ்ந்துவிட்டோம். அவர்களுடைய சிறிய உள்ளங்களிலே உள்ள பண்பு. அன்புஇவற்றை நம்மால் காணமுடியாமல் போய்விட்டதே. 'ரின்' குலுக்கல் என் சிந்தனைக்குத் தடை போட்டது. ''என்ன மாமா இன்னும் ஒன்றும் போடவில்லையே'' என்ருன் ஒரு பையன். ''ஓஹோ ஏதோ நினைவில் மறந்துவிட்டேன். இதோ என் பங்கு'' என்று கூறியபடியே என் கையிலுள்ள பணத்தைப் போட்டேன். என்னுடைய பங்குத் தொகை அதிகமாக இருந்ததால், அவர்கள் யாவரும் சேர்ந்தே ''தங்யூ அங்கிள், நன்றி மாமா'' என்றுகத்தினர்கள். காட்டுக்கூச்சலுடனேயே அந்த இடத்தைவிட்டு அகன்றனர்.

அவர்கள் காட்டுக்கூச்சலில் ஒரு புது அர்த்தத்தை என்னல் காணமுடிந்தது. இளம் இருர்களால் உண்டாகப்போகும் ஒரு புது சமுதாயத்தை என்னல் காணக்கூடியதாக இருந்தது.

நிதி திரட்டல்வேலை முடிந்ததும், நாளை மறுபடியும் அவர்களுடைய கல்எறி எங்கள்வீட்டு மாமரத்திற்குவிழலாம். நெல்லிமரங்கள் பட்டுப்போகலாம், என் நண்பனைப் போன்றவர்கள் கிடங்கிற்குள் விழலாம். ஆனல் இவையாவும் ஒருகுறிப்பிட்ட காலத்திற்குத்தான் என்பதை என்னல் நன்ருக உணரக் கூடியதாக இருந்தது. இதுவரை நாங்கள் அவர்களுடைய வெளித் தோற்றத்தைக் கொண்டே எங்கள்கணக்கைப் போட்டிருந்தோம். அவர்களு

(7-ம் பக்கம் பார்க்க)

செல்வி இ. ஜெ. செல்வத்துரை

ஞானத்தமிழ்—33

# பிறவா நாளும் பட்டினி நாளும்

வ. குகசர்மா

மனிடப் பிறவியின் மாண்பயன் இறைவனைவணங்குதல். மனிதவாழ்வின் குறிக்கோள். அது எந்த நோக்கத்திலும் எத்தொழிலைச் செய்யும் போதும் ஊடுருவி நிற்கவேண்டும். இளமையில் சமணசமயத்தில் இருந்த நாவுக்கரசர் ''குறிக்கோளிலாது கெட்டேன்'' என்று வருந்துகிருர்.

இந்தக் குறிக்கோளை நாம் அடைவதற்கு எத்தனையோ தடைகள். நம்முடன் பிறந்த புலன்களே தடையாய்நிற்கின்றன. ''இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும் ஏழையேற்கென்னுடன் பிறந்த ஐவரும் பகையே'' என வருந்தினர் அருவூர்த்தேவர். ''தொக்கு நின்றைவர் தொன்னூற்றறுவரும் துயக்கமெய்த- மிக்கும் இன்றிவர்கள் செய்யும் வேதனைக் கலந்துபோனேன்'' என்று வருந்தினர் திருநாவுக்கரசர்.

இறைவன் புகழை நாம்மறந்தாலும் இயற்கையே நமக்கெடுத்து நினைப்பூட்டிக் கொண்டே இருக்கிறது ஏழிசையின் பொலிவுற்றவீணையை மீட்டுகின்றபோது இறைவனின் சிந்தனையே எழுகின்றது. அக்கினியிலே, காற்றிலே ஆரவாரிக்கின்ற கடலிலே, மலையின் அழகிலே இறைவன் கலந்திருப்பதை உணர்கிருேம். அழகிய தண்ணளியுடைய அடியார் சிந்தையுள்ளும், வேதங்களின் பொருளிலும் அவரைத் தரிசிக்கலாம். தியானிப்பார் சிந்தையுள் தேனும் பாலுமாய் இனிப்பவர், ஒளிமயமாக விளங்குபவர். புலியூரின் கண்ணே எங்களுக்கு அருளும்படி உருவமாய்நின்று நடனம் செய்கின்ருர். அந்த இறைவன் புகழைப் பேசாத நாளெல்லாம் பிறவாத நாட்களுக்குச் சமானம் என்று கூறுகிருர் அப்பர்.

அரியானை அந்தணர்தம்
சிந்தையானை
அருமறையின் அகத்தானை
அணுவையார்க்கும்
தெரியாத தத்துவனைத்
தேனைப்பாலைத்
திகழொளியை
தேவர்கள் தம்கோனை
மற்றைக்
கரியானை நான்முகனைக்
கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக்
கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப்
புலியூரானைப்
பேசாத நாளெல்லாம்
பிறவா நாளே.

இந்தப் பிறவியில் நாம் வாழ்ந்திருப்பதற்கு மிகவும் அவசியமானது உணவு. தாம் அனுபவிக்கும் பொருட்களை எல்லாம் தம் இறைவனுகவே காண்பது திருமால் அடியாரது மனப்பாங்கு.

''வெற்றிலை இதழ்க்கு நீ
விழிக்கு நீ அஞ்சனம்
கற்றினம் மேய்க்கும்
கண்ணு நின்னையே
தீட்டுவேன் இதழ்க்கு
மீட்டுமென் விழிக்கே
என்றன் உடலுக்
கினிய சாந்து நீ
என்கழுத் துக்கோர்
ஏற்றஆரம் நீ''

என்பது நரேந்திரர் வாக்கு. திருநாவுக்கரசரும் ''இப்பொன்நீ இம்மணிநீ
இம்முத்தும் நீ
இறைவன்நீ'' என்று சிவனை வியந்து கூறியிருப்பதையும் இங்கு நோக்கலாம்.

உடலை வளர்க்கும் உணவு போல உள்ளத்தை வளர்க்க இன்றியமையாதது இறைவன் சிந்தனை. வெறும் உடல்வளர்ச்சியால் என்ன பிரயோசனம். எனவே உடல் வளர்ச்சிக்கு உணவு உண்ணுத நாளை பட்டினி நாளாக பெரியாழ்வார் கருதவில்லை. நாராயணனை தோத்தரிக்காத நாளும், நான்கு வேதங்களிலே சொல்லப்பட்ட தோத்திரங்களைக் கொண்டு மலரிட்டு திருமாலை வணங்காத நாளும் வந்தால் அவை தாம் பட்டினி நாள் என்று கருதுகிருர்.

''கண்ணு நான்முகனைப்
படைத்தானே
காரணு கரியாய்
அடியேன் நான்
உண்ணுநாள் பசியாவ
தொன்றில்லை
ஓவாதே நமோ
நாரணுவென்று
எண்ணு நாளும்
இருக்கெசுர் சாமவேத
நாண்மலர்
கொண்டுன் பாதம்
நண்ணுநாள் அவைதத்
துறுமாகில்
அன்றெனக் கவை
பட்டினி நாளே.

## மீண்டும் வருகிருர் ரவி



(சென்னை நிருபர்)

ஒரு காலத்தில் வெள்ளி விழா நட்சத்திரமாகத் தமிழ்த் திரை வானில் மின்னிய நடிகர் ரவிச்சந்திரன் சிறிது கால இடைவெளிக்குப் பிறகு மீண்டும் நடிப்பதற்கு வந்துள்ளார்.

ஸ்ரீ ஜெயமகாலட்சுமி பிலிம்ஸ் தயாரிக்கும் 'பிறந்த வீடு' என்ற புதிய தமிழ்ப்படத்தில் ரவிச்சந்திரன் முக்கிய வேடம் ஏற்று நடிக்கிருர். மேலும் ஆர் ஜி. ஆர். பிக்சர்ஸ் உருவாக்கும் பெயரிடப்படாத படத்திலும் கதாநாயகனுக நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார் திறமையுள்ள இந்த நடிகர் மீண்டும் தனது பழைய இடத்தைப்பிடிப்பார் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கிருர்கள்.

அன்புள்ள வாசகர்களே! ஈழநாடு வாரமலரில் வெளியாகும் 'ஆவியுலகத் தொடர்பு' கட்டுரைத் தொடர்களைப் படித்து வருபவர்களுள் பலர்தங்களுக்கு எழும் சந்தேகங்களை எனக்கு தெரிவித்து விளக்கம் கேட்கிருர்கள். அவர்களுக்கு தனித்தனியாகப் பதில் எழுத இயலாததால் பத்திரிகைமூலம் அவர்களுக்குப்பதிலளிக்கிறேன். வாசகர்களின் சந்தேகங்களுக்கு எப்போதும்பதில் அளிக்கக் காத்திருக்கிறேன்.

—ப. ரவிச்சந்திரன்

# ஆவி உலகத் தொடர்புகள்:

# வாசகர் சந்தேகங்களுக்கு 'ரவி' அளிக்கும் பதில்

கா. கந்தசாமி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

கேள்வி: எனது ஒரே மகன் ராஜ்குமார் நாமதேயம் 21 வயதில் ஆஸ்பத்திரியில் 6-9-76 அன்று லங் ஆப்பரேஷன் நடைபெற்று அம்மேசையிலேயே முடிவுற்ருன். அவருடன் நாங்கள் தொடர்பு கொள்ளமுடியுமா? இதற்கு மேல் எங்கள் மனநிலையை வர்ணிக்கத் தேவையில்லை என்றே கருதுகிறேன்.

பதில்: ஐயா தங்களின் துயரம் எனக்குப் புரிகிறது. தங்கள் மகன் உயர்ந்த புண்ணிய லோகத்தில் இருப்பதாக ஆவிகள் கூறுகிருர்கள். அதை நினைத்து ஆறுதல் அடையுங்கள். ஆவியுலகத் தொடர்பு கட்டுரைத் தொடரின் இறுதியில் ஆவிகளுடன் பேசும் முறைகள் வெளியாகின்றன. அம்முறைகளைப் பாவித்து உங்கள் மகனுடன் பேசி மகிழ முயற்சிசெய்யுங்கள்.

யாழ்ப்பாணத்தில் கல்வி பயிலும் (H. N. C.) மாணவன் நல்லூர் கோவில் வீதியைச் சேர்ந்தவர்.

கே: எனது எதிர் காலத்தில் நான்என்னஉத்தியோகம்பார்ப்பேன். நான் விரும்பும் பெண் மாலதியை மணம் முடிப்பேஞ?

பதில்: என்ன தம்பி படிக்கும்போதே காதலா? அதனுல்தான் உன் பெயரை வெளியிடவில்லை. எதிர்காலத்தில் எழுத்து சம்பந்தமானதொழில் அமையும். இதே கேள்வியை படிப்புமுடிந்தபிறகு கேட்டால் தெளிவாகக் கூறலாம். நிச்சயம் மாலதியை மணம் முடிப்பாய் என்று ஆவிகள் கூறியுள்ளனர். சந்தோஷம்தானே. எனக்குப் பத்திரிகை அனுப்புவாயல்லவா?

A. S. மரியநாயகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கே: நான் ஒரு கத்தோலிக்கன். நான் ஆவியுலகுடன் தொடர்புகொள்ள விரும்புகிறேன். ஆகவே அதை எப்படி? எப்போது? என்னமுறையில் ஆரம்பிப்பது என்று தெரிவிப்பீர்களா? எனது மனைவி அல்லது 7 வயது மகளை மீடியமாக பாவிக்கலாமா?

பதில்: ஆவியுலகத்தொடர்பு கட்டுரைகளைக் கவனமாகப் படித்து வாருங்கள். ஆவிகளுடன் பேசும் முறைகள் வெளியாகும் கடைசி அத்தியாயத்தில் சில அறிவுரைகளைத் தெரிவித்துள்ளேன். அவைகளை மறக்காமல் மனைவியை மீடியமாகப் பாவித்து ஆவிகளுடன் பேசுங்கள். மகளை விட்டுவிடுங்கள். பாவம்.

கே: உங்களால் சிபாரிசு செய்யக்கூடிய ஆவியுலகத்தொடர்பு உள்ளவர் யாழ்ப்பாணத்தில் இருப்பின் அவரின் விலாசத்தை தரமுடியுமா? ஒரு குரு இல்லாமல் இதைச் செய்யமுடியுமா?

பதில்: இலங்கையில் இருக்கும் மீடியங்களைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது. ஆனுல் எனக்கு வந்த கடிதங்களைப் பார்க்கும்போது எஸ். மயில்வாகனம், கைதடி வடக்கு, கைதடி என்ற விலாசமிட்ட கடிதத்தை எழுதியவர் ஒரு மீடியம் என்று ஊகிக்கிறேன். முடிந்தால் அவரைச் சந்திக்கவும். குரு இல்லாமல் பயிலும் வித்தைகள் எவ்வளவோ உள்ளன. ஆண்டவனை வணங்கிவிட்டு ஆரம்பியுங்கள். ஆரம்பத்தில் தோல்விகள் வரலாம். இடைவிடாது முயற்சிசெய்யுங்கள். ஆரம்ப காலங்களில் நானும் எனது நண்பர்களும் பல இரவுகள் கண்விழித்து முயற்சிசெய்திருக்கிறோம். (பகலிலும் முயற்சிக்கலாம்).

சிவ.ஞானநாயகன், உடுவில் கிழக்கு, சுன்னுகம்.

கே: உங்கள்கட்டுரைத்தொடரைப் படித்ததில் இருந்து ஆவிகளுடன் பேசும் அவா அதிகரித்துள்ளது. நான் இரண்டு முறை முயற்சித்துப் பார்த்தேன். பலனளிக்கவில்லையே.

பதில்: தளர்வு அடையாதீர்கள். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார். நடக்க முயற்சி செய்யும் குழந்தை எடுத்தவுடன் ஓடமுயன்ருல் முடியுமா? பல்முறை விழுந்த பிறகுதான் அதனுல் நடக்க முடியும். நம்மால் ஆவிகளுடன் பேசமுடியாது என்றும் முடிவுசெய்துவிடாதீர்கள்.

கே: ஒரு ஆவியுடன் முதன் முதல் தொடர்புகொள்ளும் போதுஅது கெட்ட ஆவியா? அல்லது நல்ல ஆவியா என்று எப்படி அறியலாம்?

பதில்: அருமையான கேள்வி. ஒரு மனிதருடன் பழக ஆரம்பித்த உடனே அவரை நாம் புரிந்துகொண்டு விடுவதில்லையா? அதேபோல ஆவிபேச ஆரம்பித்தால் தீய வார்த்தைகள் அதிகம் வெளிப்படும். தொடர்ந்து பேசிஞல் உடலில் அசதி-கைகால் வலி தோன்றக் கூடும். இவையே அடையாளங்கள். எனது நண்பர் ஒருநாள் ஆவியிடம் உனக்கு என்ன வேண்டும் என்று விளையாட்டாகக் கேட்டார். உன் குருதிவேண்டும் என்று பதில் வந்தது. அன்றே பயந்துபோன அவர் ஆவியுலகத் தொடர்பையே விட்டுவிட்டார். அவரைப்போல் நீங்களும் கோழையாகிவிடாதீர்கள். உங்களது வெற்றிக்கு எனது வாழ்த்துக்களை முன்கூட்டியே தெரிவித்துக்கொள்கிறேன்.

நீங்கள் குறிப்பிடும் உங்கள் தங்கையையும் மீடியமாகப் பாவிக்கலாம். உடல் சுத்தம் அவசியம். நம்முடைய தகுதியில் குறைவு ஏற்பட்டால் கெட்ட ஆவியின் தொடர்புதான் கிடைக்கும்.

கே. வி. ராஜா, பாமன்கடே சந்தி, வெள்ளவத்தை, கொழும்பு-6.

கே: கயானு என்றநாட்டில் இறந்த உடல்களை உயிர்கொடுத்து வேலைவேண்டும் பழக்கம் உண்டு. இதனை அரசாங்கம் சட்டமூலம் தடைசெய்துள்ளது. உயிர்கொடுக்கப் பாவிக்கும் பொருள் உடுக்கு. இதுபற்றி ஏதும் தகவல் இருப்பின் எனக்கு அறியத் தரவும்.

பதில்: நீங்கள் கூறும் தகவல் எனக்கே புதிதாக உள்ளது. இதுபற்றி நான் எப்படி உங்களுக்கு அறிவிப்பது. இதைப் பற்றி விரிவாக நீங்கள் எழுதி ஈழநாட்டுக்கு அனுப்பினுல் வாசகர்கள் படிப்பார்களே. செய்வீர்களா? இந்தியாவில் கேரள மாநிலத்திலும் ஆபிரிக்காவிலும் தான் மந்திர சாஸ்திரங்கள் அதிகம் உள்ளன. ஆனுல் மனிதனுக்கு உயிர் கொடுப்பதாக நான் இதுவரை எந்த மந்திரவாதியும் கூறக்கேட்டதில்லை. (வெளிநாட்டில் மின் அதிர்ச்சியினுல் இருதயத்தை ஓடச்செய்து உயிர்ப்பிக்கிருர்கள்)

கே: எனது மருமகன் கந்தசாமி அலியாஸ் கிருஷ்ண பிள்ளை என்பவர் சென்ற வருடம் அகால மரணம் அடைந்தார். அவருடன் பேச இயலுமா?

பதில்: இப்படிக் கேட்டால் எப்படி பதில்சொல்வது? ஆவியுலகில் எவ்வளவோ கந்தசாமி இருப்பார்கள். எனவே உங்கள் மருமகன் இறந்த தேதி-மாதம்-வருடம்-ஊர் முதலியவைகளைக் குறிப்பிட்டு எழுதினுல் அவர் இருப்பது எவ்

[6ம் பக்கம் பார்க்க]




# சொக்கனின் 'ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சி'

தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழியல் வளர்ச்சிக்கும் ஈழநாட்டவர் ஆற்றிய பங்களிப்புப் பற்றிய விரிவான ஆய்வுகள் கடந்த இரு தசாப்தங்களிற் பல்வேறு மட்டங்களில் நடாத்தப்பட்டுள்ளன. அவை தகவற் தொகுப்பு முயற்சிகளாகவும், நெறிமுறையானதும்; அறிவியல் பூர்வமானதுமாகிய ஆய்வுகளாகவும் அமைந்தன. ஆற்றல் இலக்கியம், அறிவு இலக்கியம் ஆகிய இரு கிளைகளும் காலத்தின் தேவையை ஒட்டி முதிர்ச்சி பெறும் இன்றைய காலகட்டத்திலே ஈழத்துத் தமிழிலக்கிய உணர்வும் அது பற்றிய ஆய்வுகளும் சமுதாய அமைதிக்கேற்ப பல்கலைக்கழக உயர்மட்டங்களுக்குரிய பாடநெறியாகவும்-களமாகவும் அமையலாயின. நாவல், சிறுகதை, நாடகம், கவிதை தகவல்சாதன வளர்ச்சி ஆதிய பல்வேறு துறைகள் இந்த வகையிற் கூர்மையாக ஆய்வுசெய்யப்பட்டன. ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சி பற்றி வெளிவந்துள்ள சொக்கலிங்கம் ['சொக்கன்'] அவர்களின் முதுகலைமாணித் தேர்வுக்காக எழுதப்பட்ட இந்த ஆய்வுநூல் மேற்குறிப்பிட்ட பின்னணியின் விளைவாக உருவாகியமை குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் அணிந்துரையுடன் முத்தமிழ் வெளியீட்டுக்கழகத்தினர் இந்நூலை வெளியிட்டுள்ளனர்.

தமிழ் நாடக மரபு அல்லது ஈழத்து நாடக மரபு மற்றைய நவீன இலக்கியத்துறைகள் போலப் பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளிற் புதுமலர்ச்சி பெற்றது. பம்மல் சம்பந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள் போன்றோர் தமிழ் நாட்டிலும், கலையரசு சொர்ணலிங்கம் போன்றோர் ஈழநாட்டிலும் ஆற்றிய பணிகள் ஆங்காங்கே விவரண நூல்களாகவும் உதிரிக்கட்டுரைகளாகவும் வெளிவந்துள்ளன. குறிப்பாக ஈழத்து நாடக வரலாற்றைப் பொறுத்த வரையிற் கலையரசு சொர்ணலிங்கத்தின் 'ஈழத்தில் நாடகமும் நானும்' என்ற நூல் குறிப்பிடத்தக்கது. ஆசிரியர் 67 ஆண்டுகளாகத் தாம் பெற்ற அனுபவங்களை வெளியிட்டார். இவ்விவரண நூல் 1968-ம் ஆண்டு வரையில் தொடர்ந்து தினகரன் பத்திரிகையில் கட்டுரையாக வெளிவந்து நூலுருப் பெற்றது. 1969-ம் ஆண்டில் தினகரன் வெளியிட்ட நாடக விழா மலரும் ஈழத்து நாடக வளர்ச்சி பற்றிய தகவற் தொகுப்புத் தொகுதியாகவும், ஆய்வுத் தேவையை உணர்த்தும் தொகுதியாகவும் அமைந்தது. இது ஒருபுறமாகப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் ஆர்வப் பின்னணியிற் பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஈழத்துக் கூத்துமரபை நெறிப்படுத்த முயன்றமையும் நாடகமரபுகளைத் தொகுக்க முயன்றமையும் ஈழத்து நாடக வரலாற்றிலே புதிய பரிமாணங்களை உருவாக்கின. காலப்போக்கில் கலாநிதி கா. சிவத்தம்பியும் நாடகத்துறை ஆய்வில் நுழைந்து பணியாற்றும் சூழ்நிலை ஏற்பட்டது. இவர்கள் இருவகைப் பணிகளைச் செய்தனர். ஒன்று பழைய கூத்து நூல்களைப் பதிப்பித்தமை; மற்றது பழைய நாடக மரபை இன்றைய காலத் தேவைக்கு ஏற்பப்பயன்படுத்தியமையும், வழிகாட்டியமையும். இவர்கள் பதிப்பித்த நூல்களுக்கு எழுதிய முகவுரைகளும், குறிப்புகளும் பயன்வாய்ந்தவையாக விளங்கின. இலங்கைக் கலைக்கழகத்தின் நாடகக்குழு முயற்சிகள் நாடகத்துறை பற்றிய பல்வேறு தகவல்களையும், நாடக மரபு பற்றிய செய்திகளையும் காலந்தோறும் வெளிக்கொணர்ந்தன.

நாடக மரபு மலர்ச்சிக்கு ஏற்பப் பேராசிரியர் வித்தியானந்தன் இலங்கைக் கலைக்கழக நாடகக் குழுத் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் சொக்கன் 'சிலம்பு பிறந்தது' என்ற நாடகத்தையும் 'சிங்ககிரிக்காவலன்' நாடகத்தையும் எழுதிப் பரிசு பெற்றவர். 'சிங்ககிரிக்காவலன்' 'தெய்வப் பாவை' ஆகிய நாடகங்களையும் எழுதியவர். ஆக்க இலக்கியத்தில் பல்லாண்டுகளாக ஆர்வம் கொண்டுழைத்து நாடக ஆசிரியராகிய 'சொக்கன்' அறிவியல் பூர்வமான ஆய்வுப் பின்னணியில் முதுகலைமாணிப் பட்டத்திற்காக ஈழத்துத் தமிழ் நாடகங்களை நோக்கிப் பெற்ற முடிபுகள் நீண்டகால அனுபவத்தினதும் ஆய்வினதும் முடிபுகளாக அமைந்துள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. ஏலவே சொக்கலிங்கம் நாடகாசிரியராகவும் விளங்கியமை, நூலெங்கணும் பரவலாகச் செறிந்துள்ள அனுபவக் குறிப்புகளின் மூலம் புலனாகின்றது.

'சொக்கன்' இவ்வாய்வு நூல் மூலம் வெளிக்கொணர்ந்துள்ள தகவல்களும் ஆய்வு முடிவுகளும் ஈழத்து நாடகத்துறை பற்றிய ஆய்வாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் புதுக்கிளர்ச்சியூட்டுவனவாக அமைந்துள்ளன. ஆங்காங்கு சிதறிக் கிடந்த விடயங்கள் யாவும் திரட்டப்பட்டு ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் 'சொக்கன்' கையாண்டுள்ள வரலாற்று முறையான நோக்கு ஒருவகையில் ஆழப்பார்வையாகவும் மறுவகையில் அகலப் பார்வையாகவும் உள்ளது.

ஆ. சிவநேசச்செல்வன் (எம். ஏ.)

பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளிற் சமுதாய கலாசார அறிவியற் சூழலின் பின்னணியிற் 'சொக்கன்' தமது ஆய்வினை மேற்கொண்டுள்ளார். நாட்டுக்கூத்துமரபு, விலாசம்; கொட்டகைக் கூத்து ஆகியவற்றின் பின்னணியை விளக்கும் முகமாகத் தமிழ் நாடக மரபின் நீண்ட வரலாற்றுப் பின்னணி கால வரன்முறையாகவும், மேலெழுந்தவாரியாகவும் விளக்கப்பட்டுள்ளது. பதினாறும், பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளிற் கூத்தின் மரபின் தொடர்ச்சியை விரிவாக அறியும் பதிவேடுகள் இல்லை. எனினும் கிராமந்தோறும் இம் மரபு வளர்ச்சி செறிந்திருந்தமை கூத்துக்களினூடே கிஸ்தவக் கதை மரபு, மேலைப்புல ஆடல் மரபு கலவும் புகுந்துள்ளமை மூலம் அறியலாம். கத்தோலிக்கத் தமிழர்களே ஈழத்துத் தமிழ் நாட்டுக் கூத்துக்களை அதிகமாக ஆக்கினர் எனக் கூறிய 'சொக்கன்' கத்தோலிக்கத் தமிழரதும் சைவத் தமிழரதும் நாட்டுக் கூத்துக்களின் தனிப்பண்புகளை ஒப்பியல் ரீதியாக விளக்கியுள்ளார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமய, தத்துவ, அறப் போதனை நாடகங்களின் உரிப்பொருளாக அமைந்தமை விரிவாக விளக்கங்களுடனும் அரிதின் முயன்று சேகரித்த தகவல்களுடனும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. காலப்போக்கில் இம்மரபு மாற்றமடைந்து சமுதாய மலர்ச்சிக்கேற்ப நாடக ஆசிரியர்களாலும், சமூக இயக்கப் பிதாமகர்களாலும் கையாளப்பட்டமை வரன்முறையாகப் புலப்படுத்தப்பட்டுள்ளது.

1973-ம் ஆண்டு வரையிலான நீண்டகாலப் பகுதியைத் தமது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட சொக்கன், நாட்டுக்கூத்து மரபினை விளக்கியமையைத் தொடர்ந்து நான்கு இயல்களிலே தமது ஆய்வு முடிவுகளை விளக்க முற்பட்டுள்ளார். ஈழநாட்டின் சமூக பொருளாதார அரசியல் உணர்ச்சி மாற்றங்களின் பின்னணியிலே சமய சமத்துவ அறப்போதனைகால நாடகமரபு [1917-1938] சமூகவிழிப்புகாலநாடக மரபு (1939-1958) அரசியல் எழுச்சிக்கால நாடகமரபு [1959-1973] 1970 களை ஒட்டிய நாடகப் பரிசோதனை முயற்சிகள் என்ற பாகுபாட்டுப் படையிற் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. பல்வேறு தகவல்களை ஒருமுகப்படுத்தி விளக்க முற்படும் 'சொக்கன்' நீண்டகாலப் பகுதியை எடுத்தமை அவ்வக்கால மரபுகளை ஆழமாக விளக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தவில்லை. எனினும் ஆசிரியர் ஆங்காங்கு தொகுத்துள்ள பல்வேறு தரவுகளும் கூறும் குறிப்புக்களும், விளக்கங்களும், இந்நூலாக்கத்தின் பயன்பாட்டைச் சிறப்பிக்கின்றன. ஆசிரியர் மேற்கொண்டுள்ள பண்படிப்படையான ஆய்வு ஈண்டு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயராட்சிக்காலத்தில் நாடெங்கும் பல்வேறு வகையாக கூத்துக்கள் ஆடப்பட்டன. கூத்துக்களும், கொட்டகைக் கூத்துக்களும் ஆடப்பட்ட செய்திகளை அக்காலப் பத்திரிகைகள் ஆங்காங்கு குறித்துள்ளன. சேர். குமாரசுவாமி முதலியார் அரிச்சந்திரன் நாடகத்தை ஆங்கில நாட்டு அரசரின் முன் நடித்துக்காட்டினர். எக்சாமினர், உதயதாரகை, இலங்காபிமானி போன்ற பத்திரிகைகள் இவற்றைப் புகழ்ந்து விரிவாக எழுதியதுடன், தமிழ்நாடக மரபு பற்றியும் விரிவாக எழுதியுள்ளன. இருபதாம் நூற்றாண்டாரம்பம் முதலாக ஏற்பட்ட சமூக விழிப்புணர்வு, நாடக நூல் வெளியீடுகளிற் பல்வகை முயற்சிகளை உருவாக்கியது. வெளியீட்டுச் சாதனத்தைப் பயன்படுத்தி நாடகங்கள் எழுதப்பட்டமையும், பதிப்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கவை. ஆசிரியர் இந்நாடகங்களையெல்லாம் தொகுப்பாய்வு செய்து ஆங்காங்கு கூறிச்செல்லும் குறிப்புகளும் கருத்துரைகளும் ஆய்வின் தரத்தையும், நோக்கையும் துலக்கமாகக் காட்டுகின்றன. உதாரணமாக சாவித்திரிதேவி சரிதம் [1917] முதலாக சத்தியேஸ்வரி [1938] வரை ஆசிரியர் நுண்மையாக ஆய்வு செய்துள்ளார். தாம் மேடையேற்றும் நாடகம் புராண இதிகாசத்தை தழுவியதாயினும் அதனூடாகச் சமகாலச் சமுதாயத்தின் குறைகளை எடுத்துக்காட்டி அறிவுரைபகர்வதனையும் நாடக ஆசிரியர் தமது இலட்சியமாகக் கொண்டிருந்தனர். ஆசிரியர் ஒவ்வொரு நாடகத்தையும் தனித்தனியே விளக்கி அவ்வவ் நாடகங்களின் பலத்தையும் பலவீனங்களையும் தனித்தனியே குறிப்பிட்டுள்ளார்.- குறிப்பாக சமூக எழுச்சிக் காலத்திற் (1939-1947) புராண இதிகாச கருப்பொருள்களைக் கொண்ட நாடக மரபு தளர்ச்சியடைந்து சமூக சம்பவக் கருப்பொருள்கள் முதன்மை பெற்றன. இக்காலப் பகுதியிற் பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆற்றிய பணிகள் சொக்கனால் நன்கு மதிப்பிடப்பட்டுள்ளன.

அரசியல் எழுச்சிக்கால 'நாடகங்கள் என்ற பிரிவில் [1959-1973 வரை] ஈழத்து ஆக்க இலக்கியக்காரர்களின் நாடக முயற்சிகள் விளக்கப்பட்டுள்ளன. கலைக்கழக முயற்சிகளும் பல்வேறு நிறுவனங்களின் முயற்சிகளும் விளக்கப்பட்டுள்ளன. சொக்கன் இக்கால நாடகங்களின் அம்சங்களில் பின்வரும் அம்சங்கள் முதன்மை பெறுவதாகக் கூறுகிறார். (பக். 157)

1. வரலாறு, சமயம், இலக்கியம் ஆகியவற்றின் அடிப்படையில் நாடகங்கள் அதிகமாக எழுதப்பட்டும் நடிக்கப்பட்டும் வருகின்றன.

2. எதார்த்தப் பண்பிலும் இலட்சிய நோக்கே பெரும்பான்மை நாடகங்களில் முனைந்து நிற்கின்றது.

3. தீவிரமான புரட்சிக் கருத்துக்கள் குறைவாகக் காணப்படுகின்றன.

4. காதல், வீரம், நகைச்சுவை, உளவியற்சார்பு ஆகியனவே நாடக பாத்திர உருவங்களில் அதிகமாகக் கையாளப்படுகின்றன.

5. அரசியற் கருத்துக்களிலும் பார்க்கச் சமூகக் கருத்துக்களே குறிப்பிடத்தக்க அளவு இடம்பெறுகின்றன.

மேலும் நவீன வளர்ச்சிக்கேற்ற வகையில் ஓரங்க நாடகங்கள், மொழிபெயர்ப்பு நாடகங்கள், வானொலி நாடகங்கள் கவிதை நாடகங்கள் ஆகியவற்றின் பண்புகளை நன்று ஆய்வுசெய்துள்ளார். வெகுஜன தொடர்புச்சாதனம் பின்னணியில் நாடகமரபு பெற்ற வளர்ச்சி ஆகியனவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

நாடக மரபிற் புதிய பரிசோதனைகள் பற்றிச் சொக்கன் கூறுபவை அவசரக் குறிப்புகளாகவே உள்ளன. மகாகவியின் கோடையை மேடையேற்றிய தாசீசியஸ் முதலாக, மௌனகுருவின் சங்காரம், போர்க்களம், சுந்தரலிங்கத்தின் 'விழிப்பு' வரை குறிப்புக்கள் உள்ளன. சிங்கள மேடைகளின் வளர்ச்சியும், தாக்கமும் மேற்றிசை வடிவங்களின் தாக்கங்களும் விரிவான ஒப்பியல் ஆய்வுக்குரிய அம்சங்கள். நாடக நூல்களின் எதிர்காலம் பற்றிக் கூறும் பல்வேறு குறிப்புகள் அவசியமானவை.

"நாடகக் கலைக்கு ஒரு பாரம்பரியமுண்டு. அந்தப் பாரம்பரியத்தை வரலாற்று ரீதியாக அறிந்துகொள்ளவும் அவ்வக் காலச் சமூக நிலைகளையும் இத்தன்மையும் தெளிவாக விளங்கிக்கொள்ளவும் ஏனைய இலக்கிய வடிவங்களைப் போலவே நாடக நூல்களும் உதவுகின்றன."

என்ற வகையில் நாடக இலக்கிய வளர்ச்சிக்குரிய கருத்துக்களையெல்லாம் ஆங்காங்கு தொகுத்துக் கூறுகிறார்.

ஆர்வமும், அனுபவமும் நிறைந்த சொக்கன் வெளியிட்டுள்ள இந்நூல் அவரது நீண்ட உழைப்பின் வெளிப்பாடு. ஏலவே குறிப்பிட்டது போல நீண்டகாலப் பகுதியை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டமை ஆழமான ஆய்வுக்குரிய வாய்ப்பை ஏற்படுத்தவில்லை. எனினும் ஈழத்து நாடகமரபின் பரந்த எல்லைகளைக் கோடிட்டுக் காட்டியுள்ள சொக்கனின் இவ்வாய்வுநூல் ஈழத்து நாடக வளர்ச்சியின் நீண்ட பரிணாமத்தையும் காட்டுவதுடன் வளர்ச்சியை எதிர்நோக்கும் நாடகத்துறை மலர்ச்சிக்குப் புதிய சக்தியைக் கொடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

## "தலைமுறைகண்ட தலைமகன்"

"இளைய தலைமுறையினரின் நலன்கருதித் தன் வாழ்க்கையை அர்ப்பணித்த பெரியவரின் குறிக்கோளைத் தொடர்ந்து செயற்படுத்துவது இன்றைய இளைஞர்களின் தலையாய கடன்" என்று 'ஊற்று' பிரதம ஆசிரியர் திரு க. சிவகுமாரன் இந்நூலின் பதிப்புரையில் கூறுகின்றார்.

பெரியவரின் குறிக்கோளைத் தலையாய பணியாக ஏற்றுநடக்கும், தலைமுறைதந்த தலைமகனின் முதல் தலைமகனாக விளங்கும் திரு க. கிருஷ்ணனந்த சிவம் பேராசிரியர், 'பெரியவர்' பேரம்பலம் கனகசபாபதி அவர்களைத் "தலைமுறைகண்ட தலைமகன்" என்று கண்டு நூல் வெளியிட்டுள்ளார்.

இது மிகச் சிறிய நூல். முப்பதே பக்கங்கள்கொண்ட இந்நூலின் சரி அரைப்பாகம் தான் 'சிவம்' எழுதியவை. முதலில் ஒருபதிப்புரை, அடுத்து பண்டிதமணி கி. கணபதிப்பிள்ளையின் அணிந்துரை.

'சிவம்' ஒன்பதாவது பக்கத்திலிருந்து தலைமுறைதந்த தலைமகனின் நுழைவாயிலினுள் எம்மை அழைத்துச்

(6-ம் பக்கம் பார்க்க)

## சகுனம்

''போகாதை! தம்பி பொறு''
''என்ன தொல்லை எணை?''
''ஆகாது தம்பி முளிவிசளத்திற்கே''
''என்னுச்சி! என்னுச்சி!! என்ன விசயமெணை?''
''என்னடா மோனை நீ
என்ரை சொல் கேளாயோ?
என்ன இழவு படிச்சுத் தொலைச்சியளோ?
சொன்னதைக் கேளாங்கள்
கேள்விதான் கேட்பாங்கள்''
''கேள்விமேல் கேள்வி நான் கேட்டுத்
துலைக்கையில்லை
சொல்லனெணை சொல்லன்
தொண தொணப்பை விட்டு''

°° °° °°

''புரியனைத் தின்னி
படலையிக்கை நிற்கச் சரிவருமே
போற அலுவல்
அறுதவியள்.''

°° °° °°

தன்னை மறந்தாச்சி முன்னே வருகின்றாள்
என்னை முளிக்கவென் றென்னெதிரே
நிற்கின்றாள்.
ஆச்சியுங்கூட
விதவை அதை மறந்து...?
கூச்ச விடுகின்றான் சின்னக் குழந்தையைப் போல்
ஆனால் இவள் அன்னை என்னைப் பொறுத்தவரை
ஆனல் அவன் அவ் இளம்விதவை ஆமாமாம்...?

°° °° °°

விதவையின் தரிசனம் இளமையின் பிழிவுகள்
எதுதகா தெனஇவர் உரைத்தனர் அவளது
மதுரமெல் லசைவுகள்
அழகுகள்
அறிவுகள்...?

—கல்வயல் வே. குமாரசாமி

# 'கமல்' மணக்கவிருப்பவர் இந்திய அழகுராணி!

(நமது சென்னை நிருபர்)

**கமலஹாசன் மணமுடிக்க விருக்கும் வாணி கணபதி ஒரு பி. ஏ. பட்டதாரி. 1970-ம் ஆண்டு இந்திய இளம் அழகிப் போட்டியில் இந்திய அழகியாகத் தெரிவு செய்யப்பட்டு பெர்லின் நகரில் நடந்த உலக அழகுராணிப் போட்டியிலும் கலந்துகொண்டார்.**

வாணி கணபதிக்கு 23 வயது ஆகிறது. பம்பாய் சோபியா கல்லூரியில் பி ஏ. பட்டம் பெற்றவர். 1970-ம் ஆண்டு இந்திய இளம் அழகி (Tean Princess) போட்டியில் கலந்துகொண்டு இந்திய அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மேற்கு ஜெர்மனி நாட்டில் பெர்லின் நகரில் நடந்த உலக அழகுராணிப் போட்டிக்கு அனுப்பப்பட்டார். அதில் சிறப்புப் பரிசு பெற்றார்.

1973 ம் ஆண்டில் பம்பாயில் நடந்த அழகுராணிப் போட்டியில் வெற்றிபெற்றார். அவருக்கு 'பாரத சுந்தரி' என்ற பட்டம் சூட்டப்பட்டு பரிசு வழங்கப்பட்டது. பின்னர் டெல்லியில் நடந்த அகில இந்திய அழகுராணிப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றார். பல விளம்பரங்களுக்கு மாடல் அழகியாகப் போஸ் கொடுத்துள்ளார். ஆடை அலங்கார அணிவகுப்பில் கலந்துகொண்டுள்ளார். பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது பல விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகைசூடி பரிசுகள் பெற்றுள்ளார்.

வாணி கணபதியும் அவரது தங்கை மீரா கணபதியும் நன்றாக நடனம் ஆடுவார்கள். இதுவரை 100-க்கு மேற்பட்ட நடன நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர். சுவீடன், இங்கிலாந்து, டென்மார்க், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் நடனமாடி உள்ளனர். இவர்களுடைய தந்தை கே. வி. கணபதி பம்பாயிலுள்ள கொபெரி மானர்ஸ் என்ற கம்பெனியில் பெரிய அதிகாரி. தாயார் இந்துபாலா சிறந்த பாடகி. வங்காளப்படம் ஒன்றில் பாடியுள்ளார்.



## மிகவும் பிடிக்கும்

இத்திருமணம் பற்றி வாணி கணபதி பின்வருமாறு கூறியுள்ளார்.

கமலஹாசனை எனக்கு மிகவும் பிடிக்கும். அவர் நடித்த படங்களை நான் பார்த்திருக்கிறேன். இயற்கையாகவும் அருமையாகவும் நடிப்பார். நான் அவரது ரசிகை. அவர் நடனமும் கற்றிருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. என் நடன நிகழ்ச்சிகளை அவர் ரசித்துப் பாராட்டியிருக்கிறார். திருமணத்தின் பின் நல்ல மனைவியாகப் பெயரெடுக்கவே விரும்புகிறேன். படங்களில் நடிக்கமாட்டேன்.

வாணி பிராமணர்களில் ஐயர் பிரிவைச் சேர்ந்தவர். கமலஹாசன் அய்யங்கார் பிரிவைச் சேர்ந்தவர்.

இளம் ரசிகர்களின் உள்ளத்தில் காதல் மன்னனாகத் திகழும் நடிகர் கமலஹாசனுக்கும் வாணி கணபதிக்கும் எதிர் வரும் மே மாதம் 5-ந் திகதி திருமணம் பம்பாயில் நடைபெறவுள்ளது. இது காதல் திருமணம் என்று அவரே அறிவித்துள்ளார்.

களத்தூர் கண்ணம்மா என்ற படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி இப்போது ஏராளமான படங்களில் நடித்ததன் மூலம் ரசிகர்கள் உள்ளத்தில் தனி இடம்பெற்றுள்ளவர் கமலஹாசன். நடிகை வாணி கணபதியும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்தான். பல இந்திப் படங்களில் நடித்திருக்கிறார். ஏ. பி. நாகராஜன் தயாரித்த மேல்நாட்டு மருமகள் என்ற தமிழ்ப்படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்க வாணி கணபதி ஒப்பந்தமாகியிருந்தார். ஆனால் கடைசி நிமிடத்தில் அவர் நீக்கப்பட்டு அவர் நடனமாடும் ஒரே ஒரு காட்சிமட்டும்தான் அந்தப் படத்தில் சேர்க்கப்பட்டது.

திருமண ஏற்பாடுகளை கமலஹாசன் குடும்பத்தினரும், வாணியின் குடும்பத்தினரும் செய்துவருகிறார்கள். இத்திருமணம் பற்றி கமலஹாசன் கூறியதாவது;-

மேல்நாட்டு மருமகள் படத்தில் நடிக்கும் போது நாங்கள் முதன் முதலில் சந்தித்தோம். வாணி நன்றாக நடனமாடுவார். நானும் நடனம் கற்றவன். நடனக்கலை மூலமாக எங்கள் நட்பு வளர்ந்தது. பின்னால் அது காதலாக மலர்ந்தது. அப்போதே வாணியை மணந்துகொள்வது என்று மனதில் முடிவுசெய்துவிட்டேன். திருமணத்திற்குப் பிறகு வாணி நடிக்கமாட்டார். சென்ற ஆண்டே எங்கள் திருமணம் நடந்திருக்கவேண்டும். என்னுடைய தாயார் இறந்ததால் சில காலம் காத்திருந்தோம். கலையார்வமும் நல்ல குணமும் கொண்ட வாணியை மணந்துகொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். திருமணம் முடிந்ததும் ஜப்பான், அல்லது சுவிட்சர்லாந்து நாட்டுக்குச் சென்று ஒரு மாதம் தேன் நிலவு அனுபவிப்போம் என்று கமலஹாசன் கூறினார்.

---

# தலைமுறை —

[5ம் பக்கத் தொடர்ச்சி]

செல்லுகின்றார். இங்கே முத்துப் பதித்ததுபோல கொத்துக்கொத்தாய் அறிஞர்கள் பேராசிரியரைப்பற்றிச் சொன்னவற்றிலிருந்து சிலவற்றைப் பிய்த்தெடுத்து வைத்திருக்கின்றார். ஒப்புக்கு இது ஒன்று; "இவருடன் எல்லோரும் அன்பு கொண்டவர்கள். மாணவர்களை வழிநடாத்தத்தக்க பண்புடையவர்., இவர் ஒருவரே என நாம் எண்ணினோம். ஒரு நாட்டின் அரசைத் தாங்கி நடத்தக்கூடிய சக்தி அவரிற் பொதிந்திருந்தது". இவ்வாறு பேராசிரியர் அ. சின்னத்தம்பி சொல்லுகின்றார்.

நுழைவாயிலைக் கடந்து தலைவாயிலுக்கு அழைத்துச் செல்லும் 'சிவம்' பேராசிரியரை ஊங்களுக்கு அறிமுகம் செய்கின்றார். "பரந்த நெற்றி, சிறிய உருவம், சாதாரண வேட்டியும் சட்டையும்; அருகில் இருப்பவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருக்கிறார், இறுதியில் இரு சொற்கள் அவருடைய ஆழமான அர்த்தமுள்ள கருத்து."

55 வயதை உடையவர் பேராசிரியர். பேராதனை வளாக கணிதத்துறைத் தலைவராக இருந்தவர். யாழ். வளாகத்து விஞ்ஞான பீடாதிபதியாகப் பணிபுரிந்தவர். 1956ன் பின் ஏற்பட்ட 'தேசியம்' தமிழரைச் சென்றடைவதற்காக பல்கலைக் கழகத்தில் திருப்புமுனையாகத் திகழ்ந்தவர்களில் தலையானவர்.

சமயத்திலும் அதனை ஒட்டி வளர்ந்த கலைகளிலும் பேராசிரியர் கொண்டிருந்த ஆர்வம், அந்த ஆர்வத்தின் உருவம்; அதுதான் பேராதனையில் அமைந்துள்ள குறிஞ்சிக்குமரன் ஆலயம். ஆலயத்தோடு தொடர்புடைய சம்பவங்கள் ஒவ்வொன்றும் ஈழத்து இந்து மத வரலாற்றினை பேணிக் கணிக்கத்தக்க பகுதிகளாக விளங்குகின்றன.

"தீமைகண்டு பொங்குகின்ற பேராசிரியர் யாழ் வளாக அபிவிருத்தியில்-தான் பொறுப்பேற்றதுறையில்கொண்டிருந்த செயல்பூர்வமான ஆக்கம்; 'ஊற்று' செய்துவந்த திட்டங்களில் பேராசிரியர்கொண்டிருந்த ஆர்வம், இவைகளையெல்லாம் 'சிவம்' எங்களுக்கு மிகச்சிறிய இந்நூல்வாயிலாகச் சொல்லுகின்றார்.

இந்நூலின் பொருளியல் கனதிக்கு இரண்டு ரூபா ஐம்பது சதம் அதிகமாகத்தோன்றலாம். கிடைக்கும் லாபம் ஊற்றின் விவசாயப்பண்ணை நிதிக்குத்தான். ஊற்றின் வெளியீடு இது. ஊற்று சுரக்கின்றது. பருகுவது நம்கடன்.

—குமார் ஜோதிராஜா

●

**வர்த்தகம் மாதிரி வினாவிடை:** வெளியீடு: யாழ். சட்ட நிலையம். ஆக்கியோன். எஸ். உலகநாதன்.

நீண்டகாலமாக வர்த்தகம் கற்கின்ற க. பொ. த. (சாதா) பரீட்சைக்குத் தோற்றும் மாணவரிடையே கேள்விகளைக் கிரகிக்கும்தன்மை குறைந்து சரியான முறையில் பதிலளிக்காமல் இருந்துவந்துள்ளனர். இதனால் திறமையிருந்தும் பரீட்சையில் வெற்றியடைய முடியாது மாணவர் திணறினர். மாதிரி வினாவிடைகள் காலத்திற்குக் காலம் தோன்றினாலும், சில நுணுக்கங்களை அவர்கள் மாணவர்களுக்கு புரியத்தக்கவகையில் அமைக்கவில்லை.

வர்த்தக மாதிரி வினாவிடை பாடத்திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. முக்கிய பகுதிகளான பங்குடைமை, கம்பனி அமைப்பு, காசோலை, உண்டியல், வாடகை கொள்வனவு, கூட்டுறவு, சந்தை நிலை, பணநிரம்பல் ஆகியவற்றில் பரீட்சைக்கு வரக்கூடிய கேள்விகளைத் தயாரித்து திறம்பட விடையளித்துள்ளார் ஆசிரியர்.

பரீட்சையில் கேள்விகளின் வடிவம் மாறினாலும், இந்நூலில் அமைந்துள்ள கேள்விகளே பரீட்சைக்கு வரும் என்று நம்பலாம்.

ஆசிரியர் ஒரு பரீட்சை மாணவன் என்ற நிலையில் முழுப்பாடத் திட்டத்தையும் ஆராய்ந்து இந்நூலை எழுதியுள்ளார். எதிர்காலத்தில் மாணவர்களுக்கு ஒரு கைநூல் இது என்று கூறலாம்.

—அண்ணன்

---

எண்ணிலே வாழ்வு— 10

# திட்டம் தீட்டி வெற்றி பெறுவர் 9 எண் காரர்

ஒவ்வொரு மாதத்திலும் 9, 18, 27 ந்திகதிகளில் பிறந்தவர்கள் ஒன்பது எண்காரரர். இவர்களின் அதிபதி செவ்வாய். ஒவ்வொரு வருடத்திலும், மார்ச் 21ந் திகதிக்கும், ஏப்ரல் 28ந் திகதிக்குள்ளாவது, அக்டோபர் 21ந் திகதிக்குள்ளாவது, நவம்பர் 21ந்திகதிவரை பிறந்திருப்பின் அதிர்ஷ்டத்திற்குரியவராய் இருப்பர்.

பயிர், கால்நடைகள் இவற்றைக் காக்கும் கடவுள். புயல் வரட்சியைப் போக்குபவன் செவ்வாய். மரணத்தைக் கணக்கிடவும் செவ்வாயைப் பயன்படுத்தினர் முன்னோர்.

## ★ அண்ணன் ★

ரோமானியர்கள் போர்க் கடவுளாக செவ்வாயைவணங்கினர்.

## அழகில் மயங்குபவர்

ஒன்பது எண்ணிலே பிறந்தவர் நண்பர்களையும், விருந்தினரையும் அன்போடும் பண்போடும் உபசரிப்பவர். பிற்காலத்துக்காக எதையும் சேமித்து வைக்கும் ஆற்றலுடையவர் தீவிர யோசனையுடையவர்கள். அழகான குழந்தைகளையோ எழிலான பொருட்களையோ கண்டால் உள்ளத்தைப் பறிகொடுப்பவரும் இவரே.

சாகசச்செயல் புரிவதில் வல்லவர் கருணை நிறைந்த மனம்கொண்டவர். பெரும் திட்டங்களைத் தீட்டி வெற்றி பெறுவர். பிறந்த ஊரைவிட்டு வெளியூர்களில் வாழ ஆசைப்படுபவர். பிறரைப்பற்றி சதா பேசுவார். தம்மைப்பற்றி யார் பேசினாலும் வம்புக்குப் போக அஞ்சாதவர்.

பிறருடைய ஆலோசனைகளை எதிர்பார்க்காமல் தம் இஷ்டப்படி காரியமாற்றுபவர். தாம் செய்வது சரியென நம்பி பிறர் தம் காரியங்களில் குறுக்கிட்டால் பழிவாங்குபவர். நண்பர்களானாலும் சரி, தாய்தந்தையரானாலும் சரி சற்று ஏறுமாறாகவே நடந்துகொள்வர். இதனால் பின் வருந்துவதுமுண்டு.

## பிடிவாதம் உள்ளவர்

இவர்கள் பெரும்பாலும் ஆத்ம திருப்திக்காக கடவுளை வணங்குபவர். எந்த வேலையையும் அரைகுறையாக விட்டுவிட விரும்பாதவர். மனதில் துளிர்விடும் ஆசைகளை வெளிக்காட்டிக்கொள்ளாமல் மனதில் மறைத்துவைப்பவரும் இவரே.

அவசியம் ஏற்படும்போது மட்டுமே பொய்சொல்வதோடு நேர்வழியில் செல்லவேண்டுமென நினைப்பவர் மனதிலுள்ளவற்றை பிறருக்குசொல்லாமல் செயல்படுவதில் வல்லவர்.

யாராவது ஒருவர் வாதிக்க தொடங்கினால் அதை முடிவு வரை ஒருகை பார்த்துவிடுபவர். பிடிவாதகுணம் நிரம்பியவர். தங்கள் அபிப்பிராயத்தை வெளிக்காட்டாமல் எதிரியை மயக்கி கடைசி நேரத்தில் தாக்குவதில் வல்லவர். பல்வகையாக துரோகங்களை செயல்படுத்துவதில் வல்லவர். தான் ஜெயிக்கவேண்டுமென்பதற்காக தகாதவற்றையும் செய்வார்.

## கசப்பு மனப்பான்மை

இவர்களுக்கு காதல் விடயங்களிலும் சரி; குடும்பவிடயங்களிலும் சரி சுகம் கிடைப்பது குறைவு, மணவாழ்க்கையில் கசப்பு மனப்பான்மை தோன்றக்கூடும். இவர்கள் சுபாவத்திற்கு இயைய கூடிய கணவர்மார்களோ, மனைவிமார்களோ கிடைப்பது குறைவு இவர்களது துணைவர்மார்கள் ஒருவேளை குடும்பத்தில் இசைந்து நடந்தாலும் பிள்ளைகள் இசைந்து நடக்கமாட்டார்கள். இவர்களுக்கு பெரும்பாலும் காலம் கடந்தே திருமணம் நடைபெறும்.

போராடப் பிறந்தவர்களான இவர்கள், எத்துறையில் ஈடுபட்டாலும் அதில் முன்னிற்பவர்.

ஒன்பது எண்காரரர் எப்பொழுதும் 5, 14, 23, 9, 18, 27, 6, 15, 24 தினங்களில் எக்காரியங்களில் ஈடுபட்டாலும்அதிர்ஷ்டமுண்டு. 1, 10, 19, 28-ந் திகதிகளிலும் சற்றுஅதிர்ஷ்டமுண்டு. 2, 11, 20, 29 தினங்களில் சற்று அலைச்சலும் துயரமுமுண்டு.

இவர்களுக்கு 3, 5, 6, 9 எண்காரரர்கள் நண்பர்களாக வாய்ப்பார்கள். 6 எண்காரர் துன்பங்களைகேட்டறிவர். 4 எண்காரரர் சமயத்தில்உதவுவர் இரண்டு எண்காரரர் இவர்களைப்பற்றி சிலவேளை தூஷிப்பர்.

---

# வாசகர்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விடம்? அவருடன் பேச இயலுமா! என்று கேட்டு எழுதுகிறேன்,

கே: நான் தைக்குப் பிறகு தமிழ்நாட்டுக்கு வருகிறேன். அப்போது உங்களை எங்கே சந்திக்கலாம்?

பதில்: ஆகா! தாராளமாக வாருங்கள். நீங்கள் கடிதம் எழுதியுள்ள விலாசத்திற்கே வரலாம். நான் சில காரணங்களால் நேரிடையாக ஆவிகளுடன் தொடர்புகொள்வதில்லை எனது நண்பர் ஒருவரை மீடியமாகப் பாவித்து ஆவிகளுடன் பேசுகிறேன். (கட்டுரைகளில் நான் குறிப்பிடும் ஜெயசித்தாராம் என்பது அவர்தான்) அவர் இருப்பது கடலூர் என்ற ஊரில் என்னை நீங்கள் சந்தித்தால் ஆவிகளைப் பற்றிய சந்தேகங்களுக்கு விளக்கமளிப்பேன். ஆவிகளுடன் பேசவேண்டும் என்றால் நண்பரிடம்தான் செல்லவேண்டும். ஒருநாள் முழுவதும் என்னுடன் செலவிடும்படியாக வாருங்கள். முன்கூட்டியே மீண்டும் கடிதம் எழுதிவிட்டு வாருங்கள்.

கண. மகேஸ்வரன், நுணவில், கரவெட்டி என்பவர் தான் கண்ட கனவைப்பற்றிய விளக்கம் கேட்டுள்ளார்.

மனிதனுடைய எண்ணங்களே கனவுகளை உருவாக்குகின்றன. ஆவிகளாலும் கனவில் வர இயலும். உங்கள் கனவுக்கும் ஆவிகளுக்கும் சம்பந்தமில்லை. என்னுடைய கட்டுரைகள் உங்கள் ஆழ் மனதின் உணர்வுகளை ஆக்கிரமித்துக்கொண்டதன் விளைவுதான் அக்கனவு. இதற்கு மேல் அக்கனவுக்கு பொருள் கூறமுடியாது.

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி-சரோஜாதேவி- வாணிஸ்ரீ- நாகேஷ்
K. பாலச்சந்தரின்
"தாமரை நெஞ்சம்"
(புதிய பிரதி)

சிறுவர்களுக்கான ஆங்கிலப்படக்காட்சி
சனி, ஞாயிறு காலை 8-30 மட்டும்
"TREASURE ISLAND"

2-வது வெற்றி மாதம்
ராணி (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
வி. பி. கணேஷன் — சுபாஷினி
ராம்தாஸ் — ஜெனிட்டா நடித்த
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

50-வது நாளைநோக்கி வெற்றிநடைபோட்டு ஓடுகிறது
ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
கணவன்

கடைசிவாரம்
ரீகோ (யாழ். நகர்) போன்: 7693
எம். ஜி. ஆர். - லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
நீதிக்கு தலைவணங்கு

மனோஹரா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி - விஜயா நடித்த
இரு மலர்கள்

யாழ். பஸ் நிலையத்தில்

# பிரயாணிகள் மோதல்: கண்டக்டர் காயம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் நேற்று முன்தினமிரவு நடந்த தாக்குதல் சம்பவத்தில், கண்டக்டர் எஸ். தனநாயகம் காயமடைந்து யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பஸ்நிலையத்திலுள்ள 'கியூ'க்கள், மாற்றப்பட்டதைத் தொடர்ந்து பிரயாணிகள் தாங்கள் நிற்கவேண்டிய 'கியூ' எதுவெனத் தெரியாது திண்டாடினர்.

இந்த நிலையில், பருத்தித்துறை பஸ்ஸை பிரயாணிகள் முற்றுகையிட்டதைத் தொடர்ந்து பொலிசார் பிரயாணிகளை 'கியூ' வரிசையில் நிற்குமாறு கோரினார்களென்றும் அச்சமயம் ஏற்பட்ட மோதலில் கண்டக்டர் காயமடைந்தார் என்றும் கூறப்படுகிறது. இதுபற்றி பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர். [ஈ]

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
ஜெய்சங்கர் - சுஜாதா
நீ ஒரு மகாராணி

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-30,
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
தாயைக் காத்த தனயன்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
K. பாலசந்தரின்
அபூர்வராகங்கள்

Regal (Jaffna)
Daily 4-45, 7-00 & 9-30 p. m.
Hayley Mills Hywel Bennett
in
TWISTED NERVE
(color)

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
❀ கமலஹாசன் ❀ ரஜனிகாந்த்
❀ எம். எஸ். விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்

RIO (Jaffna) Grand Release
Daily 4 Shows
நரகத்தின் மூலை எனக் கணிக்கப்படும் வனத்திலே அகப்பட்ட இரண்டு கூலிப்பட்டாள வீரர் உலகம் கண்டிராத இரத்தக் களரி நிறைந்த யுத்தத்தைக் காண-
HIGH VELOCITY
More Suitable For Adults

## இன்று

(யாழ்ப்பாணம்)

'நல்லை நகர் நாவலன்' நூல் வெளியீட்டுவிழா இன்று மாலை யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிக்கு வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு தி. மாணிக்கவாசகர் தலைமை வகிப்பார். ஆசியுரைகளை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் சு வித்தியானந்தன், மாவட்ட நீதிபதி சே. வி. நவரெட்ணம் ஆகியோர் வழங்குவர். பாராட்டுரைகளை திருவாளர்கள் பொ. ச. குமாரசாமி, அ. பொன்னம்பலம், க.இ. குலரத்தினம் வழங்குவர். வெளியீட்டுரையை தேவன் வழங்குவார். விழாவில் 'நல்லை நகர் நாவலர்' நாடகம் இடம்பெறும். [கெ]

## ஆசிரியர் சங்கம் அதிர்ச்சி!

(யாழ்ப்பாணம்)

தம் செலவில் கற்று அரச நியமனங்களைப் பெறக்காத்திருக்கும் தோட்டப்பாடசாலை ஆசிரியர்களைக் கல்வி அமைச்சிற்கு நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு பொய்யான அழைப்புகளை அனுப்பிய விஷமிகள் குறித்து ''இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம்'' அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்துள்ள அதேவேளையில் கல்வி அமைச்சரை இவ் ஆசிரியர்கட்குஉடன் வழமைபோல நியமனங்களை மலையகப்பாடசாலைகளில் வழங்குமாறு மகஜர் மூலம் கோரியுள்ளது.

## மணவாளக் கோலமும் கதாப்பிரசங்கமும்

[சாவகச்சேரி]

சாவகச்சேரி சப்பச்சிமாவடிப் பிள்ளையார் கோவில் மணவாளக்கோலம் 12-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அன்றுபிற்பகல் கோவில் கூட்டுப்பிரார்த்தனை இரண்டாவதாண்டு விழா நடைபெறும். இதில் விஷேச நிகழ்ச்சியாக முத்தமிழ்வித்தகி செட்டிநல்லபிள்ளை நாகமுத்து ''பார்வதிகல்யாணம்''என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

## திறப்புக் கோர்வை யாருடையது?

கச்சேரியடியில் வை. எம். சி. ஏ. கட்டிடத்துக்கருகில் கண்டெடுக்கப்பட்ட திறப்புக்கோர்வை ஈழநாடு காரியாலயத்தில்கொட்டடியைச்சேர்ந்த இளையதம்பி சிவநேசனால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

## சிறுகதை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

டைய காட்டுக் கூச்சலுக்கும் அமரிக்களத்திற்கு மடியில் ஒரு கட்டுப்பாடு, தன்னலமற்ற சேவை, ஒழுங்கு முதலியவை மறைந்திருக்கின்றன.

அளவுக்கதிகமாக உணர்ச்சிவசப்பட்டதாலேயோ, என்னவோ? என் கண்களில் நீர் நிரம்பியது கண்களிலுள்ள நீர்த்திரையினால் அவர்கள்உருவங்கள் எனக்கு மங்கலாகவே தெரிந்தன. கண்களில் உள்ள நீரைச் சுண்டியவாறு அவர்களை நோக்கினேன் என் உள்ளத்திலும் ஒரு தெளிவு பிறப்பதை உணரக் கூடியதாக இருந்தது

(யாவும் கற்பனை)

பொங்கு தமிழ் இன்பத்திருநாட்டில்
100 நாட்களுக்கு மேல் ஓடிய
வெற்றிச்சித்திரம் வண்ணக் கலரில்
சங்கமம்!
ராஜா [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
கே. ஆர். விஜயா
மனோகர்
விஜயகுமார்
சோ
அசோகா பிரதர்ஸ்




"மேயர் மீனாட்சி"
ஈஸ்ட்மென் கலர்

# விழாக்கோலம் பூண்டிருக்கும் கண்டி நகர்

சரித்திரம் பல சமைத்த மலையகத் தலைநகராம் கண்டி மாநகரில், மற்றுமொரு அத்தியாயம் இன்று எழுதப்படுகிறது.

இன்றையக் கதாநாயகன்—மக்களின் அதிகாரத்தைப் பெற்ற செயலதிகாரமிக்க ஜனாதிபதியாக நேற்றுச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட ஜூனியஸ் றிச்சார்ட் ஜயவர்த்தனவாகும்.

மக்களின் மதிப்பைப்பெற்று, மக்கள் ஜனாதிபதியாகிவிட்ட மாண்பு மிக்க ஒரு சரித்திர புருஷனை — பெருந்தலைவனை — வரவேற்க கண்டி மாநகரம் இன்று விழாக்கோலம் பூண்டிருக்கிறது! இது; கண்டி நகரின் சரித்திரத்தில் எழுதப்பட்டு புரட்டப்படும் மற்றுமொரு அத்தியாயம் என்றால் பொருந்தும்! காரணம்—

கண்டி மாநகர் பல சரித்திரங்களை — வீர வரலாறுகளைக் கண்டிருக்கிறது. சரித்திரங்கள், நாட்டின் பல வரலாறுகள் எழுதப்படுவது கண்டியில் தான் என்பது ஒரு மரபாகி விட்டது.

அண்மைக்கால வரலாற்றை எடுத்துக்கொண்டால், கண்டியில் தான் கடந்த 'மக்கள் அரசாங்கம்' நாட்டின் புதிய அரசியலமைப்புக்கு செயல்வடிவம் கொடுக்கும் விழாவை வெற்றிகரமாக நடத்தியது. இதனைத் தொடர்ந்து சரித்திரப் பிரசித்திபெற்ற மகாமலுவ மண்டபத்தை அரசு உடைமையாக்கியது. கடந்த ஆண்டு, ஆட்சிக்குவந்த ஐ. தே. கட்சி அரசு, மகாமலுவவை தலதா மாளிகையிடமே திருப்பிக்கொடுத்தது. ஆட்சிக்கு வந்து அரச கட்டிலில் ஏறியதும் கண்டிக்கு வந்துதான் பிரதமர் ஜே. ஆர். நாட்டு மக்களுக்கு முதல் செய்தி விடுத்தார்.

கடந்த 'மக்கள்' அரசு கட்டி வைத்த சில ஞாபகார்த்தக் கட்டிடங்களை இன்று காணவில்லை. தலதா மாளிகைக்கு முன்பதாக ஏரியின் பக்கமாக காட்சி தந்த இக்கட்டிடங்கள், இருந்த இடம் தெரியாமல் இன்று மறைந்துவிட்டன.

கண்டி மாநகரை இன்று பார்க்கும்போது எங்கும் எதிலும் பச்சை பளிச்சிடுகிறது. நகர் முழுவதுமே பச்சை நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. பிரதான பஸ்நிலையம், கண்டி புகையிரதநிலையம் முழுப் பச்சையாகக் காணப்படுகிறது. பலரும் எதிர்பார்த்த மாதிரி வரவேற்பு வளைவுகளோ பிரமாண்ட மானபந்தல்களோ இங்கு காணப்படவில்லை.

இதற்குப் பதிலாக, கண்டி நகரின் மத்தியில் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு எதிரே—கிழக்கு பக்கமாக ஒரேஒரு பிரமாண்டமான 'முடிக்குரிய' பந்தல் கம்பீரமாகக் காட்சி தருகிறது! இந்தப் பந்தலின் மேற்புறத்தில் பழைய கண்டிய அரசர்களின் முடியைப்பிரதிபலிப்பதுபோல பெரியஅளவில் ஒரு முடி காணப்படுகிறது.

இப்பந்தலின் உயரம் 40 அடியாகும். வண்ணப் பூக்களால் இப்பந்தல் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

வழக்கம்போல முக்கியவைபவங்களின்போதும், பெரஹரா காலத்திலும் மக்கள் அலையினால் திக்குமுக்காடும் கண்டி நகரம் இன்று ஜனவெள்ளத்தில் மூழ்கிவிடும் என்று எதிர்பார்க்கப்படுவதால் போதுமான எல்லா பாதுகாப்பு—உதவி நடவடிக்கைகளையும் கண்டி பொலிசார்மேற்கொண்டுள்ளனர்.

இன்றைய முக்கிய நிகழ்ச்சிகளில்; காலை 9-30க்கும் 10-30க்குமிடையே ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவும் பாரியாரும் மல்வத்தை; அஸ்கிரிய மகாநாயக்க தேரோக்களைச் சந்திப்பார்கள். பகல் 2-30க்கு புத்தரின் புனித தந்தத்தைப் பார்வையிடுவார்கள். மாலை ஐந்து மணிக்கு தலதா மாளிகையின் எண்கோண மண்டபத்திலிருந்து நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தனது முதலாவது செய்தியை விடுப்பார். இரவு எட்டு மணிக்கு விசேஷ ராஜ மகாபெரஹராவை ஜனாதிபதியும் பாரியாரும் கண்டு களிப்பார்கள்.

— கே. ஜி. எம்.

## தேவை

கடதாசிப் பொம்மைகள்' இலைகள், நைலோன் . கூடைகள், பாக்லைகள் தயாரிக்கத் தெரிந்தவர்கள், பழகுவதற்கு விருப்பமானவர்கள் தேவை. விபரங்களுக்கு: கயித், இண்டஸ்றீஸ், பூமணி லேன், மருதனமடம். 8427

## இன்று

அமரர் டாக்டர் நாகநாதனின் நினைவுதின பொதுக்கூட்டமும், கரிகாலனின் 'மெழுகுவர்த்தி' நூல் வெளியீடும் இன்று நல்லூர் கல்யாண மண்டபத்தில் மாலை 5மணிக்கு நடைபெறும்.

நல்லூர் தேசியப் பேரவை உறுப்பினர் திரு. மு.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் உட்பட பலர் உரையாற்றுவார்கள். [க]

## தொழிற்சங்க அறிக்கை

[யாழ்ப்பாணம்]

அண்மையில் யாழ்ப்பாணம் மாநகரசபையில் நடைபெற்ற வேலை நிறுத்தம் சம்பந்தமாக இலங்கை பொதுக்கைத்தொழில் தொழிலாளர் சங்க வடபிரதேசச் செயலாளர் திரு. எம். ஏ. கி. இக்பால் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

"21 கோரிக்கைகளை முன்வைத்து 31-1-78 தொடக்கம் 3-2-78 நண்பகல் 1 மணிவரை நடைபெற்ற யாழ். மாநகர சபைத் தொழிலாளர்கள்வேலை நிறுத்தம் பெரும் வெற்றிகளுடன் முடிவடைந்தது. கோரிக்கைகளில் 10 கையொப்பமிடப் பட்டஉடனேயே அமுல் நடத்தப்படுகின்றது. 9 கோரிக்கைகள் வெகு விரைவில் அதற்கான அதிகாரம் பெற்று நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2 கோரிக்கைகள் தொழிற்சங்கத்தால் வாபஸ்வாங்கப்பட்டது"

மேற்படி சமரச மகாநாட்டில் தொழிற்சங்கத்தின் சார்பில் திரு. எஸ் தியாகராஜா, திரு. எம். ஏ.கி. இக்பால், திரு. கே தர்மலிங்கம், திரு கே சிவஞானமும் இச் சமரச மகாநாட்டை கூட்டுவதில் முன்னின்ற மாநகரச் சட்டத்தரணி திரு த பூபாலனும் கலந்துகொண்டார்கள். (க)

## கொழும்பு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றார். அவருக்குப் பின்னர் திரு.ஜெயவர்த்தன சென்றார். அவரது துணைவியாரும் உடன் சென்றார்

இலங்கை அரசியல் அமைப்பின் பிரிவுகளின்படி ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொள்ளுபடி பிரதம நீதியரசர் கேட்டுக்கொண்டார். அதன்பின்னர் பதவிப் பிரமாணத்தை வகித்து திரு. ஜெயவர்த்தன ஜனாதிபதியாக பதவி ஏற்றார்

அதன்பின்னர் முப்படைகளின் அணிவகுப்பை புதிய ஜனாதிபதி பார்வையிட்டார்

அவர் மீண்டும் மேடைக்குத் திரும்பிய பின் முப்படை வீரர்கள் ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்துமுகமாக அணிவகுத்துச் சென்றார்கள்

ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்துமுகமாக 21 பீரங்கிகளும் தீர்க்கப்பட்டன

### விமானப்படை சாகசம்

அவர்களைத் தொடர்ந்து பள்ளி மாணவர்களின் அணிவகுப்பு இடம்பெற்றது. இதன் பின்னர் விமானப்படையினர் விண்ணில் தமது சாகசநிகழ்ச்சிகளின் மூலம் புதிய ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தினர்கள்

விமானங்கள் விண்ணில் அணிவகுத்தும் தாழப் பறந்தும் பார்வையாளர்களைப் பரவசத்தில் ஆழ்த்தினர்கள்

## தலைவராக தெரிவு

[யாழ்ப்பாணம்]

யாழ். கொட்டடி ஸ்ரீ மீனாட்சி சன சமூக நிலைய நடப்பு வருடத் தலைவராக திரு.செல்லையா விமலரட்ணம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஐவர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

# கோரிக்கைகள் விரைவில் நிறைவேற்றப்படும்

## —யாழ். மாநகர ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை ஊழியர் கோரிக்கைகள் தொடர்பாக ஆணையாளர் துண்டுப் பிரசுரமூலம் பதில்களை வெளியிட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் ஆணையாளருக்குமிடையே பேச்சுவார்த்தை நடந்தது. இப் பேச்சுவார்த்தையின் போது சட்டத்தரணி பூபாலனும் திரு. ஜெகநாதனும் மாநகர சபை சார்பில் கலந்துகொண்டனர். தொழிலாளர்சார்பில் மின்சாரசபையைச் சேர்ந்த திரு. தருமகுலசிங்கமும் கலந்துகொண்டார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் ஒரு மணிக்கு தொழிலாளர் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு உடனடியாக வேலைக்குத்திரும்பினார்கள்.

வேலைநிறுத்தம் பற்றிய செய்தி 'ஈழநாடு' வில் வந்திருந்தது வாசகர்கள் அறிந்ததே.

வேலைநிறுத்தத்தில் பங்கு பற்றாத தொழிலாளர்களுக்கு ஆணையாளர் நன்றிதெரிவித்தார். வரியிறுப்பாளர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் பணியாற்றிய மாநகர சபை உத்தியோகத்தர்களுக்கும் ஆணையாளர் நன்றிதெரிவித்தார்.

தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் விசேட ஆணையாளர் நடாத்திய பேச்சுவார்த்தைகளில் தொழிற்சங்கத்தின் சார்பில் சமர்ப்பித்த 21 கோரிக்கைகளில் பெரும்பாலானவற்றைத் தான் நிறைவேற்றித்தர நடவடிக்கை எடுப்பதாகவும், ஏனையவற்றை உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு ஆவன செய்வதாகவும், எல் பி டி சில்வா கமிஷன் அறிக்கையின் படி தொழிலாளர்களுக்குரிய சம்பள உயர்ச்சியை மூன்று மாத காலத்துக்குள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், 1-3-72 லிருந்து 1-10-73 வரையும் தொழிலாளர்களுக்குக் குறைக்கப்பட்ட ரூபா 1-10 சதத்தை தொழிற் 'கோட்டு' முடிவைப் பார்த்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பிரதிநிதிகளுக்கு வாக்களித்தார். [அரி. நி.]

# பருத்தித்துறையில் சிரமதானம், மரம் நாட்டல்

(நெல்லியடி)

திரு ஜே ஆர் ஜெயவர்த்தன இலங்கையின் முதலாவது அதிகாரம் பெற்ற ஜனாதிபதியாக பதவியேற்பதையொட்டி சிறப்பு வைபவங்கள் பல பருத்தித்துறை இபோச டிப்போவில் நடைபெற்றன

மரம் நாட்டு விழா, சிரமதானப் பணிகள் என்பன முக்கிய இடம்பெற்றன. ஐதேக கட்டுப்பாட்டிலுள்ள . தேசிய தொழிற் சங்கம் மேற்படி வைபவங்களை ஒழுங்குசெய்திருந்தது

டிப்போ வாசலில் நீண்ட குலை வாழைகளாலும் சவுக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட மின்சார வேலைப்பாடுகள்வெகு அழகாகச் செய்யப்பட்டிருந்தது. டிப்போ எங்கும் பச்சை நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது,

காலை 7 மணிக்கு புலோலி ஞான வைரவர் ஆலயத்தில் விசேட பூசை நிகழ்ச்சிகள் ஆரம்பமானது,

நூற்றுக்கணக்கான ஊழியர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டு பஸ்வண்டிகளைச் சுத்தம் செய்தனர்

இச்சிரமதான நிகழ்ச்சியை டிப்போ முகாமையாளர் திரு பி பூ மகாலிங்கம் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில், ஊழியர்களின் தேசவிசுவாசம், கடமை உணர்ச்சி ஆகியவற்றைப் பாராட்டி சிரமதானப்பணியில் பங்கு கொண்ட ஊழியருக்கு நன்றி கூறினார்

சிரமதானத்தில் பங்கு கொண்ட தொழிற்சங்கப் பிரமுகர் திரு வி மகாலிங்கம் பேசுகையில் "தார்மீகசமுதாயமொன்றை அமைப்பதன் மூலமேதான் இன ஒற்றுமையும் பொருளாதாரமுன்னேற்றமும் ஏற்படும்- இன்றைய தேசிய நலனில் தொழிலாளர்களாகிய நம் பங்கு முக்கியமானது ஆகவே எமது தொழிலாளர்கள் நம்பிக்கை, நாணயம் ஒத்துழைப்பு உடையவர்களாக. விளங்கி நாட்டிற்கு உண்மையானவர்களாகவும் விசுவாசமுள்ளவர்களாகவும் விளங்கவேண்டும்

## வேலணையில்

(வேலணை)

சுதந்திரதினத்தை முன்னிட்டும் ஜதிஜனபதியாகவும் திரு ஜே ஆர் ஜெயவர்த்தன பதவிப்பிரமாணம் செய்து கொள்வதை முன்னிட்டு நேற்று வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தேசியக் கொடியேற்றும் வைபவம் நடைபெற்றது

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு ஆ செந்தில்வடிவேல் காலை 8 58க்கு தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். வேலணை வங்களாவடி முருகன்கோவிலில் விசேட பூசையும் நடைபெற்றது

இத்தின முக்கியத்துவம் பற்றி உதவி அரசாங்க அதிபர் பணிமனைமுன்றலில்நடந்த பொதுக் கூட்டத்தில் பலரும் உரையாற்றினர்.

இச்சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நாளையிட்டு பழமர நாட்டுதல் நிகழ்ச்சியும் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

## சரண்சிங்...

[1ம்பக்கத் தொடர்ச்சி]

கலந்துகொண்ட இந்திய உள்துறையமைச்சர் திரு. சரண்சிங் நேற்று ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனவைச் சந்தித்தார் இந்திய அரசின் பாராட்டுக்களை அவர் நேரடியாகத் தெரிவித்துக் கொண்டார்.

அமெரிக்க அதிபரின் விசேஷ பிரதிநிதியும் ஜனாதிபதியைச் சந்தித்து பாராட்டுத் தெரிவித்தார்;

புதிய ஜனாதிபதிக்கு சீனத் தலைவர் திரு குவா குவா பெங் உட்பட பல வெளிநாட்டுத் தலைவர்கள் பாராட்டும் வாழ்த்தும் அனுப்பியிருக்கிறார்கள்

இந்திய ராஷ்டிரபதி, எகிப்திய அதிபர் அன்வர் சதாத், பாகிஸ்தான் ஜனாதிபதி சியா ஹுல் ஹக், இந்தோனேஷிய அதிபர் சுகார்ட்டோ, மற்றும், கானா, ஈயபா, வியட்னாம், அமெரிக்கா போன்ற நாடுகளின் வாழ்த்துக்களும் அனுப்பியுள்ளனர்.

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு




இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் கொவனந்தா ரக்க யாழ்ப்பாணம் கேகோவில் மேல் வீதி 63-ம் இலக்கத்தில் அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Ianaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri La ka.